யோக மஞ்சரி

★

பிரசுரம்
ஆனந்தபோதினி காரியாலயம்,
சென்னை-1.

உ

ஸ்ரீராமஜெயம்.

யோக மஞ்சரி

"கோசார பல நிர்ணயம்," நூலுக்கு ஆசிரியரான

N. R. திருவேங்கடாசாரியர் B. A.

அவர்கள் இயற்றியது.

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

ஸ்ரீமான். நா. முனிசாமி முதலியாரவர்களால்

வெளியிடப்பெற்றது.

1948

காப்பிரைட் ரெஜிஸ்டர்ட்] [விலை ரூ. [illegible]

PRINTED AT THE
"ANANDA BODHINI" PRESS,
NO.6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
SOWCARPET, MADRAS.

முன்னுரை

வினைப்பயனை அறியவும், அறிந்ததன் பின் அவைகளால் ஏற்படும் துக்கத்தை [illegible]க்குவதற்கோ குறைத்துக் கொள்ளுவதற்கோ சாஸ்திரங்களில் உபதேசித்துள்ள சாந்தி மார்க்கங்களைத் தெரிந்து கொள்வதற்கும் ஜோதிஷ சாஸ்திர ஞானம் அவசியமெனப் பராசரர், கௌதமர், பிருகு, நாரதர், காசியபர், கர்க்கர், அத்திரி முதலான மஹரிஷிகள் பல நூல்களைச் செய்திருக்கிறார்கள். ஜோதிஷ சாஸ்திரத்தைப் பற்றி நானூறாயிரம் சூத்திரங்கள் எழுதப்பட் டிருக்கின்றன. மஹரிஷிகளின் கருத்துக்களைப் பின்னால் நமது தேசத்தில் வராஹ மிஹிராச்சாரியார் தம்முடைய பிருஹத் ஜாதகத்திலும், மகாகவி காளிதாஸன் தம்முடைய ஜாதக சந்திரிகையிலும், கலியாணவர்மன் தம்முடைய சாராவளியிலும், மந்திரேசுவரர் தம்முடைய பல தீபிகையிலும், வெங்கடேச தெய்வக்ஞன் தம்முடைய சர்வார்த்த சிந்தாமணியிலும், வைத்தியநாத தீக்ஷிதர் தம்முடைய ஜாதக பாரிஜாதத்திலும், துண்டிராஜன் தம்முடைய ஜாதகாபரணத்திலும், சத்தியாசாரியார் தம் பெயர் கொண்ட சத்திய சம்ஹிதையிலும் அழகிய விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கு கூறிய நூல்கள் தவிர மகரிஷி பராசரரே இயற்றிய ஹோரா சாஸ்திரமும், ஜெயமுனி மஹரிஷி இயற்றிய ஜெயமுனி சூத்திரம் என்ற நூலும், பிருகு மஹரிஷி இயற்றிய பிருகு சூத்திரம் என்ற ஜோதிஷ நூலும் பூர்த்தியாய்க் கிடைத்திருக்கின்றன. ஜோதிஷ விஷயங்களை ஏகதேசமாவது தெரிந்து தனது வாழ்க்கையை நடத்த விரும்புகிறவன் இங்கு குறிப்பிட்டிருக்கிற மஹான்களின் நூல்களையாவது அவசியம் படிக்க வேண்டுமென்பது ஜோதிஷ சாஸ்திரத்தில் ஆராய்ச்சி செய்திருக்கிறவர்களின் அபிப்பிராயம்.

யோகாத்தியாயம் என்றும், பாவாத்தியாயம் என்றும், தசாத்தியாயம் என்றும் ஜாதக விஷயங்களை மஹான்கள் மூன்று பிரிவாக எழுதியிருக்கிறார்கள். இம் மூன்று பிரிவுகளிலும் காணக்கிடைக்கின்ற விஷயங்களை கிரகித்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட ஜாதகத்திற்குரிய பலாபலன்களை நிர்ணயிப்பது சாஸ்திரியமான முறையாகும். இது தவிர கோசரம், அஷ்டவர்க்கமென்ற இரண்டு பிரிவுகளையும் சேர்த்துக் கொண்டு அவ்வப்போது நடைபெறக்கூடிய தசாபலன்களை ஊகிக்க வேண்டுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம். ஆகையினால் இது வரை கூறியிருப்பதினின்றும் 1. யோகாத்தியாயம், 2. பாவாத்தியாயம், 3. தசாத்தியாயம், 4. கோசரத்தியாயம், 5. அஷ்டவர்க்கத்தியாயம். ஆகிய இவ்வைந்து பிரிவுகளையும்

செவ்வையாய்ப் படித்து அவைகளில் உபதேசித்துள்ள ரகசியங்களை அறிந்து கொண்டு இஷ்ட தேவதாத் தியானத்துடன் தனக்கோ மற்றவர்களுக்கோ ஒரு குறிப்பிட்ட பாவத்தினுடைய சுபா சுபத்தன்மையை அறிந்து கொண்டு சுகத்தைப் பெருக்கிக் கொள்ளவோ கஷ்டத்தை ஜெபஹோம தானத்தினல் நீக்கவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ முயல வேண்டும்.

பாவத்தில் எவ்வித தோஷமிருப்பினும் யோகாத்தியாயத்தில் சொல்லியுள்ளபடி பலமிருந்தால் அந்த தோஷம் நிவர்த்தியாய் ஜாதகனுக்கு காரியானுகூலம் ஏற்படும். ஆகையினல் எல்லாப் பிரிவுகளிலும் யோகாத்தியாயம் பிரதானமாகக் கருதப்படுகிறது.

சாஸ்திரங்களில் விரிந்து கிடக்கின்ற யோகாத்தியாயங்களில் கூறப்பட்டிருக்கிற பலவித கிரக செயற்கைப் பார்வைகளினல் ஏற்படும் யோகங்களின் பெயர்களையும் அவைகளுக்குரிய பலா பலன்களையும் தொடர்ச்சியாக சர்வேஸ்வரனுடைய திருவருளை முன்னிட்டு எழுதுவதற்கு முன்வந்திருக்கிறேன். இப்படி எழுதி வருவதில் சொற்பிழை பொருட்பிழை ஏதேனு மிருப்பினும் பண்டிதர்கள் என்னை மன்னித்து பொறுமையுடன் சாராம்ஸங்களையே கிரகித்து நற்பலன்களை அடைய வேண்டுமாய் வணக்கமாகவும் அன்பாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை.
20—4—'48.

இப்படிக்கு,
N. R. திருவேங்கடா சாரியர், B. A.

உ

ஸ்ரீராமஜெயம்.

யோகமஞ்சரி

ஜாதக பலன்களை அறிவதற்கு சூரிய சித்தாந்தப்படி லக்கின கிரகஸ்புடாதிகளை கணித்துக் கொண்டு ஸ்ரீபதி தம்முடைய பத்ததியில் உபதேசித்துள்ளபடி 1. பாவஸ்புடம், 2. கிரகஷட்பலம் (அதாவது ஸ்தான, ஜேஷ்டா, அயன, கால, திக், திருக் ஆகிய இவ்வாறு பலமும்) 3. சகமஸ்புடம், 4. அஷ்டக வர்க்கம், 5. ஆயுர்த்தாயம் இவ்வைந்தையும் கணித்துக் கொண்டு பலா பலன்களை யறிவது சாஸ்திரீய மென்றும், சந்தேகத்திற்கு இடம் ஏற்படாத முறை யென்றும் சொல்வர். பிராணன் என்று சொல்லப்பட்டுள்ள உதய லக்கினம், சரீரகாரகன் என்று பெயர் பெற்ற சந்திரன் இருக்கும் லக்கினம், ஆத்ம காரகனை சூரியன் இருக்கிற லக்கினம் இம்மூன்றையும் பிரதானமாகக் கொண்டு குஜாதி பஞ்சக் கிரகங்களின் பலத்தை அறிய வேண்டு மென்பதைப் பராசர மஹரிஷி தமது ஹோரா சாஸ்திரம் பூர்வகாண்டம் இருபத்திரண்டாவது அத்தியாயத்தில் உபதேசிக்கிருர். அவருடைய வழியைப் பின்பற்றினவர்களான வராஹமிஹிரர், மந்திரேசுவரர், வைத்திய நாத தீக்ஷிதர், கலியாணவர்மன், துண்டிராஜன் இவர்களும் தங்களுடைய நூல்களில் விரிவு படுத்தியிருக்கிருர்கள்.

சந்திரனும் குஜாதி பஞ்சக் கிரகங்களும்

சூரியன் தவிர சந்திரன் இருக்கிற இராசிக்கு இரண்டாவது இராசியில் கிரகங்கள் இருந்தால் சுனபா என்ற யோகமும், பன்னிரண்டாவது இராசியில் இருந்தால் அனபா என்ற யோகமும், இரண்டிலும் பன்னிரண்டிலு மிருந்தால் துருதரா என்ற யோகமும், சந்திரனுக்கு இரண்டாவது ராசியிலும், பன்னிரண்டாவது ராசியிலும் கிரகமே இல்லாவிட்டால் கேமத்துரும என்ற ஒரு அசுப யோகமும் ஏற்படுகின்றன. இவ்விதம் சந்திரனுக்கு இரண்டாவது பன்னிரண்டாவது இராசியில் இருக்கிற கிரகங்கள் பூர்ண பலத்துடனிருந்தால் அதற்குரிய சுப பலன்களும் பூர்ணமாக நடைபெறு மென்றும், குறைந்த பலமுள்ளவைகளாக இருந்தால்

பலன்களும் அதற்குத் தகுந்தபடி குறைவாகவே நடக்குமென்றும் கூறுவர். இது சாமானியமான விதியாகத் தோற்றினும் இந்த யோகத்திற்குச் சொல்லிய பலன்கள் அனுபவத்திற்கும் சரியாகவே இருக்கின்றன. மீன இராசியில் சந்திரன் இருந்து அதற்கு இரண்டாவதான மேஷ இராசியில் இருக்கிற சனியினால் ஏற்படும் சுனபா யோகப் பலன்கள் அற்பமாகவே யாகுமென்பது சனி மேஷ இராசியில் நீசமடைந்த காரணத்தால் சுனபாயோக பலன்களை பூர்ணமாக கொடுக்க முடியாதவனாகிறான் என்பதே இதன் காரணம். கன்னியா ராசியில் சந்திரன் இருந்து அதற்கு இரண்டாவது இராசியான துலா ராசியில் சனி இருந்தால் சனிக்குரிய சுனபாயோக பலன்கள் பூர்ணமாக நடைபெறக் கூடுமாம். துலாராசி சனிக்கு உச்சஸ்தானமாக இருப்பதே இதற்குப் பிரதம காரணம்.

சுனபாதி யோக பலன்கள்

சந்திரனுக்கு இரண்டில் குஜன் பலத்துடனிருந்தால் ஜாதகன் பூபதியாகவும் (அரசனாகவோ, அல்லது மிகுந்த செல்வாக்குள்ளவனாகவோ ஆகலாமென்பதும் பொருள் கொள்ளலாம்) குரூர சுபாவமுள்ளவனாகவும், டாம்பீகனாகவும், சுதிரதியாகவும் (மனோபல முள்ளவனாகவும்), தனம் விக்கிரமம் உள்ளவனாகவும், கோபியாகவும் இருக்கக்கூடும்.

சந்திரனுக்கு இரண்டாவது இராசியில் புதன் பலத்துடன் இருந்தால் வேத சாஸ்திரங்களிலும், சங்கீத முதலான சாஸ்திரங்களிலும் தேர்ச்சியுள்ளவனாய் இருக்கக்கூடும். மனஸ்வீயாகவும், இத வாக்குள்ளவனாகவும், தார்மீகனாகவும் இருக்கக்கூடும்.

சந்திரனுக்கு இரண்டாவது இராசியில் குரு பலத்துடனிருந்தால் சர்வ வித்தைகளிலும் தேர்ச்சியுள்ளவனாகவும், ஸ்ரீமானாகவும் (சௌக்கியமுள்ளவனாகவும்), குடும்பியாகவும், அரசனுக்கு வேண்டியவனாகவும், இராஜத்துல்லியனாகவும், யஸஸ் (கீர்த்தி) உள்ளவனாகவும் இருக்கக்கூடுமென்பர்.

சந்திரன் இருக்கும் இராசிக்கு இரண்டாவது இராசியில் சுக்கிரன் பலத்துடன் இருந்தால் விக்கிரமமுள்ளவனாகவும், களத்திரசுகமுள்ளவனாகவும், தனிகனாகவும், க்ஷேத்திரமுள்ளவனாகவும், (பூமியென்றும் சொல்லலாம்) முயற்சி செய்து கொண்டிருப்பவனாகவும் இருக்கக்கூடுமென்பர். (தன க்ஷேத்திர கர்மவான் என்று மூல பாடம்) கன்று காலிகள் உள்ளவனாகவும், அரசனைப்போல் சுகமுள்ளவனாகவும் இருக்கக்கூடுமென்பர்.

சந்திரனுக்கு இரண்டாவது இராசியில் பலத்துடன் சனியிருந்தால் ஜனங்களால் புகழப்படுகின்றவனாகவும், தனவானாகவும், புத்தி தீக்ஷண்யமுள்ளவனாகவும், எக்காரியங்களையும் சாதிப்பதில் நிபுணனாகவும் இருக்கக்கூடும்.

இதுவரையில் சந்திரலக்ன தனஸ்தானத்தில் இருக்கக்கூடிய குஜாதி பஞ்ச கிரஹங்களின் மூலம் நிகழக்கூடிய பலாபலன்கள் சொல்லப்பட்டன. இனி சந்திர லக்னத் விரையஸ்தானமான 12-வது ராசியில் இருக்கக்கூடிய குஜாதி பஞ்சக்ரஹங்கள் மூலம் மனிதனுக்கு ஏற்படக்கூடிய பலாபலன்களை இங்கே கவனிப்போம்.

சந்திர லக்னத்திற்கு 12-வது ராசியில் அங்காரகன் இருக்கும்பொழுது ஜனித்தவன் யுத்த சேவையில் பிரியமுள்ளவனாகவும், குரோதியாகவும் அதாவது கோபியாகவும், திருஷ்டஸ் சோரஜனப் பிரபுவாகவும், அதாவது துஷ்ட ஜனங்களுக்குத் தலைவனாகவும், தீரனாகவும் இருப்பான். இங்கே அங்காரகன் சந்திர லக்னத்திற்கு 12-வது ராசியில் இருப்பதற்குரிய பலன்களைப் பொதுவாகச் சொல்லியிருப்பினும் அந்தந்த ராசியின் தன்மையை அநுசரித்தே பல நிர்ணயம் பண்ணவேண்டும். உதாரணமாக சிம்ம சந்திரனுக்கு 12-வது ராசியான கடக ராசியில் இருக்கும் அங்காரகன் மூலம் ஏற்படும் அநபா யோக பலன்களுக்கும், கும்ப சந்திரனுக்கு 12-வது ராசியான மகர ராசியிலிருக்கும் அங்காரனுக்குரிய அநபா யோக பலன்களுக்கும் வெகுவான வித்தியாசங்கள் உண்டென்பது நன்கு விளங்குகிறது.

சந்திர லக்னத்திற்கு 12-வது ராசியில் புதன் பலத்திருந்தால் சங்கீதம், சித்திரம் இந்த சாஸ்திரங்களில் வித்பத்தியுள்ளவனாகவும், வாக்மீயாகவும், ராஜ பூஜ்யனாகவும், அரசர்கள் அரச சமானர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் இவர்களால் சிலாகிக்கப்பட்டவனாகவும், யஸஸ்வியாகவும் இருப்பான்.

சந்திரலக்னத் 12-வது ராசியில் குரு பலத்துடனிருந்தால் ஜாதகன் ராஜ பூஜியனாகவும், அதி மேதாவியாகவும், காம்பீரிய குணசத்வ வானாகவும், தனாட்டியனாகவும் இருப்பான்.

சந்திர லக்னத் 12-வது ராசியில் சுக்ரன் இருந்தால் ஸ்திரீகளுக்கு பிரியனாகவும், பசுக்கள் உள்ளவனாகவும், புத்தி தீக்ஷண்யவானாகவும், தன தான்யாதிகளுள்ளவனாகவும் இருப்பான்.

சந்திர லக்னத்திற்கு 12-வது ராசியில் சனி இருக்கும்பொழுது பிறந்தவன் விஸ்திரண பாகுள்ளவனாகவும் அதாவது நீண்ட

கைகள் உள்ளவனாகவும் குணவானாகவும், பசுக்கள் உள்ளவனாகவும், முக்கிய ஸ்தாபனங்களை வகிப்பவனாகவும், பலர் ஆமோதிக்கக்கூடிய அபிப்ராயங்களுள்ளவனாகவும் இருப்பான். ஆனால் கெட்டஸ்திரீயுடன் சேர்ந்தவனாக இருப்பான். அதாவது பரஸ்திரீ கமனமுள்ளவனென்றோ அல்லது துஷ்ட பத்தினியுள்ளவனென்றோ இருக்கவும் கூடுமென்று சிலர் ஊகிக்கிறார்கள்.

இது வரையில் சந்திர லக்னத் இரண்டாவது வீட்டிலிருக்கும் குஜாதி பஞ்சக்ரஹங்கள் மூலம் ஏற்படக்கூடிய சுனபா யோக பலன்களும், சந்திரனுக்கு 12-வது ராசியிலிருக்கும் குஜாதி பஞ்சக்ரஹங்களின் ஸ்திதி மூலம் ஏற்படக்கூடிய அனபா யோக பலன்களும் சொல்லப்பட்டன.

பொதுவாக சுனபா யோகத்தில் பிறந்தவன் அரசனாகவோ, அல்லது அரசனுக்கு ஒப்பானவனாகவோ இருப்பான். நல்ல கீர்த்தி தனவரவு, தீக்ஷண புத்தி இவைகளுடன் கூடியவனாகவுமிருப்பான். அனபா யோகத்தில் பிறந்தவன் பிரபுவாகவும், சீலவானாகவும், கியாதி யுள்ளவனாகவும், ரோக மற்றவனாகவுமிருப்பான். இவ்விதம் ஜாதக தத்வமென்ற ஜோதிஷ நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

சந்திர லக்னத்திற்கு இருபுறமும் அதாவது 2-வது 12-வது ராசிகள் இரண்டு இடங்களிலும் க்ரஹங்கள் இருந்தால் துருதரா யோகமெனப்படும். பொதுவாக துருதரா யோகத்தில் பிறந்தவன் தன, வாகனாதி சுகமுள்ளவனாகவும், கிடைத்த விஷயங்களின் அநுபவத்தினால் உண்டான சுகத்தை அநுபவிக்கிறவனாகவும் இருப்பான் (உத்பன்ன போகசுக பாக்கிய என்பது மூல பாடம்.).

துருதரா யோக பலன்களைச் சற்று விவரமாக ஆராய்வோம், சந்திர லக்னத்திற்கு இரு புறங்களிலும் அங்காரகன், புதன் இவர்களிருந்தால் அசத்தியவாதியாகவும், ஆயினும் விஷயஞான முள்ளவனாகவும், பேராசையுள்ளவனாகவும், கெட்ட நடத்தையுள்ள விருத்த ஸ்திரீகளுடன் சேர்ந்தவனாகவும் இருப்பான். மேஷ ராசியில் சந்திரனும், மீன ராசியில் புதனும், விருஷபத்தில் அங்காரகனும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். புதன் மீன ராசியில் நீசம் பெற்றதாலும், சுக்கிரனுடைய ராசியில் அங்காரகன் இருப்பதாலும் இந்த அங்காரக புதர்களால் ஏற்படும் குற்றங்குறைகள் ஜாதகனிடத்தில் அதிகப்படியாக இருக்குமென்று ஊகிக்கலாம். அங்காரகன் சுக்கிரனுடைய ராசியிலோ, சுக்கிர

னுடைய நவாம்சத்திலோ இருந்தாலும், அங்காரகனுடைய ராசியிலோ நவாம்சத்திலோ சுக்கிரன் இருந்தாலும் ஜாதகன் பொதுவாக அதிகாமியாகவும், பரஸ்திரீ கமனமுள்ளவனாகவும் இருப்பானென்பது இவ்விதம் அங்காரக புதர்களால் ஏற்படும் தோஷ பலன்கள் அவர்கள் தங்களுக்குரிய அசுபராசிகளில் இருந்தால் அதிக்கிரமித்தும், அவர்கள் தங்களுக்குரிய சுபராசிகளிலிருந்தால் தோஷங்கள் ரொம்பவும் குறைந்தும் நடைபெறும். இம்மாதிரியே இனிச் சொல்லப்படும் பலன்கள் விஷயங்களிலும் ஊகிக்கவேண்டும். க்ரஹங்களின் ராசி, பாவ, சம்பந்த, வீக்ஷண, சுபா சுபத்தன்மையைக் கவனித்தே ஒவ்வொரு யோகத்திற்கும் உபதேசித்துள்ள பலன்கள் அதம, மத்திம, உத்தம என்ற பிரிவுகளுள் எம்முறையில் நடைபெறுமென்பதை ஊகித் தறியவேண்டும்.

அங்காரகனுக்கும் குருவிற்கும் மத்தியில் சந்திரனிருந்தால் ஜாதகன் யஸஸ்வீயாகவும் தன்னுடைய வீரியத்தினால் அடைந்த தனமுள்ளவனாகவும் இருப்பான் ஆயினும் சத்துரு பீடையும் ஏற்படும். இவனுடைய நல்ல ஒழுக்கத்தினாலேயே இவனுடைய க்ரஹத்தில் மற்றவர்களும் அவனைப்போல் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். அதாவது இவனுடைய ஒழுக்கத்தைக் கண்டு இவனைச் சேர்ந்தவர்களும் தார்மீகர்களாக ஆவார்கள்.

அங்காரகன், சுக்கிரன் இவர்களுக்கு நடுவில் சந்திரன் இருந்தால் ஜாதகன் குரூரனாகவும், தார்மீகனாகவும், தனிகனாகவுமிருப்பான். ஆனால் சிற்சில சமயங்களில் பீதியினால் நற்பாதையினின்றும் விலகி விடுவான். அதாவது தர்ம விரோதமாகவும் நடக்கும்படி நேரிடும்.

அங்காரகனுக்கும் சனிக்கும் நடுவில் சந்திரன் இருந்தால் குத்ஸித ஸ்திரீ ரதியாகவும் அதாவது கெட்ட ஸ்திரீகளுடன் சேர்ந்தவனாகவும், குரோதியாகவும், தனவானாகவும், கபடியாகவும், பல வழிகளிலேயும் சத்துரு பீடித முள்ளவனாகவும் இருப்பான். இவ்விதம் சத்துருக்களால் உபத்திரவங்கள் ஏற்படினும் தாபமடையமாட்டான் அதாவது சலிக்காமல் தைரியமாக அவர்களுடன் போராடுவான்.

குருவிற்கும் புதனுக்கும் மத்தியிலிருக்கிற சந்திரனாலேற்படும் துருதராயோக பலன்களாவன: தர்மாத்மாவாகவும், சாஸ்த்ரங்களில் தேர்ச்சியுள்ளவனாகவும், (அதாவது வேதம், வேதாங்கங்கள், தர்ம சாஸ்த்ரங்கள், இதிஹாச புராணாதிகள்) வாக்மீயாகவும்,

கவியாகவும், சஜ்ஜனங்களுடன் சேர்ந்தவனாகவும், யஸஸ்வியாக வும் இருப்பான்.

சந்திரன் மனஸ்காரன் என்று சொல்லப்படுகிறது. சந்திர னுடைய பலத்திற்கேற்றாற் போல ஜாதகனுடைய புத்தியின் பலமுமிருக்கும். புதன் வித்தியாகாரகன் என்றும், குரு புத்தி காரகனென்றும் ஜோதிஷ சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக் கிறது. ஆகையினால் பலம் பொருந்திய குரு, புதன் இவர்களுக்கு மத்தியில் சந்திரன் இருக்கும் பொழுது பிறந்தவன் நல்ல மனசு, புத்தி இவையுள்ளவனாகவும் மகா பண்டிதனாகவும் அதனால் பெருங்கீர்த்தி பெற்றவனாகவு மிருப்பான்.

பலம் பொருந்திய சுக்கிரன் புதன் இவர்களுக்கு மத்தியில் சந்திரன் இருக்கும் பொழுது ஜனித்தவன் நாட்டிய, சங்கீத முதலான சாஸ்திரங்களில் பற்றுள்ளவனாகவும், பிரியவாக்குள்ளவனாகவும், அழகுள்ளவனாகவும், மகா புத்திமானாகவும், சூரத்தன்மையுள்ள வனாகவும் இருப்பான்.

சனிக்கும் புதனுக்கும் மத்தியில் சந்திரனிருக்கும் பொழுது பிறந்தவன் பல தேசங்களுக்குப் போக வேண்டியவனாகவும், பூஜிக் கத் தகுந்தவனாகவும், நடு நிலைமையுள்ள தனம் வித்தையுடன் கூடியவனாகவும், ஆயினும் பந்துஜனங்களை த்வேஷிப்பவனாகவு மிருப்பான்.

குருவிற்கும் சுக்கிரனுக்கும் மத்தியில் சந்திரன் இருக்கும் பொழுது பிறந்தவன் நிருப துல்யனாகவும் அதாவது அரச சமான னாகவும், ஸ்ரீமானாகவும், தைரியவானாகவும், நிர்மலமான மன துள்ளவனாகவும் இருப்பான்.

சனிக்கும் குருவிற்கும் மத்தியில் சந்திரன் இருக்கப் பிறந்த புருஷன் சுகியாகவும், வினயவிக்ஞான வித்யா ரூப குணவானாக வும், தனிகனாகவும், பெருந்தன்மை யுள்ளவனாகவும் இருப்பான்.

சனிக்கும் சுக்கிரனுக்கும் மத்தியில் சந்திரன் இருக்கும் பொழுது பிறந்தவன், நற்குணமில்லாத ஸ்திரீகளின் கூட்டத் திற்கு தலைவனாகவும் (நிர்குண ஸ்திரீ ஜனப்ரபு என்று மூல பாடம்) விருத்தா சார குலாட்யனாகவும், தனிகனாகவும், அரச னுக்கு பிரியனாகவும், இருப்பான்.

விசேஷ விதி

இது வரை சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் இருக்கும் குஜாதி பஞ்சக்ரஹ மூல மேற்படும் சுனபாயோக பலன்களும்

பன்னிரண்டாவது ராசியிலிருக்கக்கூடிய குஜாதி பஞ்சக்ரஹ மூலமேற்படும் அனபா யோக பலன்களும், சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டு ஆகிய இவ்விரு ராசிகளிலும் இருக்கக்கூடிய குஜாதி பஞ்சக்ரஹ மூல மேற்படும் துருதரா யோக பலன்களும் சொல்லப்பட்டன. இப்பலன்கள் க்ரஹங்கள் இருக்கிற ராசி களின் தன்மைக்கேற்றாற் போல பூர்ணமாகவோ, மத்திம மாகவோ, அற்பமாகவோ நடைபெறும். க்ரஹங்களின் நவாம்சங் களையும் கவனித்தே பல நிர்ணயம் பண்ணவேண்டும். யாதா மொரு கிரஹம் ராசியில் நீசம் பெற்றிருப்பினும், தனது உச்ச நவாம்சத்தில் இருந்தால் அக்கிரஹம் பலத்துடனிருக்கிறதென் பது. மேலும் சந்திரன் ராகு கேதுவுடன் சேர்ந்திருந்தாலும் அல்லது அவனுக்கு 2வது; 12வது ராசிகளிலிருந்தாலும், யோகத்திற்குரிய க்ரஹம் சூரியனில் அஸ்தங்கத தோஷத்தை யடைந்திருந்தாலும் குறிப்பிட்ட யோகத்திற்குரிய பலன்களும் மிச்ரமமாகவே நடைபெறு மென்பது.

தரித்திர யோகம்

சந்திரனுக்கு இரண்டாவது பன்னிரண்டாவது ராசிகளில் க்ரஹமே யில்லாவிட்டால் கேமத்ரும யோகமென்று சொல்லப்படும். இது ஒரு அசுபயோகம். இதனால் ஜாதகனுக்கு பணக் கஷ்டங் கள் மிகுதியாக ஏற்படும்.

சந்திரன் லக்னத்திலேயோ, சப்தமபாவத்திலேயோ இருந்து குருவினாலும் பார்க்கப்படாவிட்டால் ஜாதகனுக்கு கேமத்ரும யோகத்திற் குரிய அசுப பலன்கள் நடைபெறுமென்று ஜாதக பாரிஜாதம் அத்தியாயம் 7, சுலோகம் 71ல் சொல்லியிருக்கிறது.

சூரியனுடன் சேர்ந்த சந்திரன் அசுப நவாம்சத்தில் இருப்ப துடன், பாபியினாலும் பார்க்கப்பட்டால் தரித்திர யோகத்தினால் ஜாதகன் கஷ்டப்படுவான்.

ராத்திரியில் ஜனித்தவன் ஜாதகத்தில் க்ஷீண சந்திரனுக்கு அஷ்டம பாவத்தில் அசுபன் இருந்தாலும் அல்லது அப்பாவத் தைப் பார்த்தாலும் தரித்திர யோகமுண்டு. இங்கே க்ஷீண சந் திரன் என்றால் கிருஷ்ணபக்ஷ சந்திரன் அதாவது பௌர்ணமிக்கு மேல் அமாவாசை வரையில் சந்திரனுடைய கலைகள் குறைந்து கொண்டே வருகிறதால் க்ஷீண சந்திரன் என்று சொல்லப்படும். 'அமாவாஸ்யாம் சதுர்தஸ்யாம் க்ஷீண சந்த்ரோ நசர்வதா' என்று ஒரு சுலோகம் இருக்கிறது. இதன் பொருள் சந்திரன் தேய்

பிறை காலத்தில் 14வது 15வது இவ்விரு தினங்களிலே தான் முக்யமாக அசுபனாகிறான். ஆகையினால் தேய் பிறையில் சதுர்த்தசி, அமாவாசை இவ்விரு தினங்களில் ராத்ரியில் சந்திரனுக்கு அஷ்டம பாவத்திற்கு பாபருடைய செயற்கையோ, வீக்ஷணமோ இருக்கும் பொழுது பிறந்தவனுக்கு தரித்திர யோகத்திற்குரிய தோஷபலன்கள் அளவுமீறியே நடைபெறுமென்று ஊகிக்கலாம்.

ராகு கேதுக்களுடன் சேர்ந்த சந்திரன் பாபியினாலும் பார்க்கப்பட்டிருந்தால் தரித்திரத்தினால் கஷ்டமேற்படும்.

லக்னத்திற்கோ சந்திரனுக்கோ சுகபாவம் என்ற நான்காம் பாவத்திற்கு பாபர்களின் செயற்கை அல்லது திருஷ்டி இருந்தாலும் தரித்திர யோகம்.

கேமதுரும யோகம்

க்ஷீணச் சந்திரன் நீசராசியிலிருக்கும் பொழுது ராத்திரியில் ஜனித்தவனுக்கும் கேமதுரும யோக முண்டு. பௌர்ணமிக்கு மறுதின முதல் சந்திரனுடைய கலைகள் ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வந்து அமாவாசை யன்று சுத்தமாய் மங்கிப் போவதால் இந்தப் பதினைந்து தினங்களிலும் சந்திரனுக்கு க்ஷீணச்சந்திரன் என்று பெயர். நமது ஜோதிஷ சாஸ்திரங்களில் க்ருஷ்ணபக்ஷ சந்திரன் அதாவது தேய்பிறை சந்திரன் அசுபனென்றும், சுக்கிலபக்ஷ சந்திரன் அதாவது வளர்பிறைச் சந்திரன் சுபனென்றும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் சந்திரன் பக்ஷபலமில்லாத பொழுது அதாவது க்ஷீணச்சந்திரனா யிருக்கும்பொழுது தனக்குரிய நீசராசியாகிய விருச்சிக ராசியிலுமிருந்து ராத்திரி வேளையிலும் பிறக்கிறவனுக்கு கேமதுரும யோகமென்ற தரித்திர யோக மூலம் பலவித பணக் கஷ்டங்கள் ஏற்படக்கூடும். இங்கே சந்திரனுக்கு மூன்று தோஷங்கள் மூலம் ஏற்படக்கூடிய அசுப பலன் சொல்லப்பட்டது. அதாவது (1) க்ஷீண சந்திரனாயிருப்பது, (2) நீச ராசியிலிருப்பது, (3) இராக்காலத்தில் பிறப்பது

கேமதுரும யோகத்திற்கு சில விலக்கு விதிகள்

சந்திரன் கேந்திர பாவத்திலிருப்பதுடன் குருவினால் பார்க்கப்பட்டால் கேமதுரும யோகபங்க மெனப்படும். அதாவது ஜாதகனுக்கு வேறு காரணங்களினால் கேமதுரும யோகத்திற்குரிய கிரஹஸ்திதி இருப்பினும் இங்கு சொல்லியபடி சந்திரனுக்கு பல மிருந்தால் சந்திரன் மூலம் யாதொரு தோஷமுமேற்படாது. கேந்திரத்திலிருக்கும் சுக்கிரன் குருவினால் பார்க்கப்பட்டிருந்தாலும் கேமதுரும யோகபங்க மெனப்படும்.

சந்திரனுக்கு கேந்திர பாவத்தில் கிரகங்களிருந்தாலும் கேமதுருமம் கிடையாது.

சந்திரன் சுபனுடன் சேர்ந்தோ, சுபர்களுக்கு நடுவில் இருந்தோ, குருவினால் பார்க்கப்பட்டால் தரித்திர யோகம் ஏற்படாது.

அதிமித்ரு நவாம்சத்திலோ, உச்ச ராசியிலோ இருக்கிற சந்திரன் குருவினால் பார்க்கப்பட்டாலும் தரித்திர யோகம் ஏற்படாது.

பூரணச் சந்திரன் லக்னத்தில் சுபனுடன் கூடி இருந்தாலும் அல்லது பத்தாம் பாவத்தில் உச்சராசியிலிருந்து குருவினால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் ஏழ்மைத் தனத்தை அடையமாட்டான்,

சிங்கத்தைக் கண்ட யானைகள் ஓடி மறைவதைப் போல கேமதுரும யோகத்தினால் ராஜயோகங்களெல்லாம் பங்கப்படும். ஆகையினால் கேமதுரும யோகம் அதைப் பங்கப்படுத்தும் வேறு கிரஹஸ்திதிகள் ஆகிய இவைகளெல்லாம் இதுவரை கூறப்பட்டன.

இதுவரையில் சந்திரனாலேற்படும் சுனபா யோகம், அனபா யோகம், துருதரா யோகம், கேமதுரும யோகம், கேமதுரும யோக பங்கம் ஆகிய யோகங்கள் சொல்லப்பட்டன சந்திரனுக்கும், குருவிற்கும் ஏற்படக்கூடிய ஒரு வகை சம்பந்தத்தைக் கொண்டு சில யோகங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

சகட யோகம்

லக்னாத் கேந்திரம் நீங்கிய இதர பாவங்களில் இருக்கும் குரு, சந்திரனுக்கு 6-வது அல்லது 8-வது ராசியிலிருந்தால் சகடமென்ற ஓர் துர்யோக மேற்படும். இதிலிருந்து தெரிகிற தென்னவென்றால் சந்திரனிருக்கும் ராசி முதல் 6 அல்லது 8-வது ராசியில் குரு இருந்தாலும், குருவானவன் லக்னாத் கேந்திர பாவங்களிலிருந்தாலும் சகடயோகமில்லை. பராசரர் சப்தக்ரஹங்களும் ஒன்றாவது பாவத்திலும் ஏழாவது பாவத்திலு மிருந்தாலும் சகடயோகமென உபதேசிக்கிறார்.

சகடயோகத்தில் பிறந்தவன் ராஜ குலத்தவனாயினும் தரித்திரனாகவும், பலவித கஷ்டங்களுக்கு உட்பட்டவனாகவும், அரசனால் வெறுக்கப்பட்டவனாகவும் ஆகிறான். மந்திரேஸ்வரர் கூறுகிறதாவது:—சகட யோகத்தில் பிறந்தவன் சிற்சில சமயங்களில் பாக்யமிழந்தவனாக இருந்து கொண்டு மறுபடியும் எல்லா பாக்யத்தையும் அடைபவனாகவு மிருப்பானென்று ஒரு விசேஷ பலன் உபதேசிக்கப்பட்டது. அதாவ்து வியாபார மார்க்கத்திலோ, உத்தியோக மார்க்கத்திலோ சிற்சில சமயங்களில் விபத்துக்கள் ஏற்படினும் மறுபடியும் ஜாதகன் நல்ல பதவியை அடைவான். ஜாதகனுடைய நிலைமை மிஸ்ரமாக இருக்கும்.

கஜகேசரி யோகம்

சந்திரனுக்கும் குருவிற்கும் ஏற்படக்கூடிய ஒரு வகை சம்பந்தத்தைக் கொண்டு ஒருவித சுபயோகம் சொல்லப்படுகிறது. அதாவது சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருந்தால் கஜகேசரி யோக மெனப்படும். அஸ்தகங்கததோஷமற்ற சுக்கிர, குரு, புதர்களால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் கஜகேசரி யோகம்.

கஜகேசரி யோகத்தில் பிறந்தவன் தேஜஸ்வீயாகவும், பூமி, பணம் இவை உள்ளவனாகவும், மேதாவியாகவும், உயர்ந்த குணங்கள் உள்ளவனாகவும், அரசன் அல்லது உயர்ந்த பதவியில் உள்ளவ்ர்களுக்குப் பிரியனாகவுமிருப்பான்.

'கேஸரியோகே ஜாதோ தனவான் ஸ்வகுலாதிபோ மஹாப்ராக்ஞ:
க்ராமபுர நகரகர்த்தா ஸஹஸ்ர மாஸேஷு ஜீவிதம் வித்யாத்.'

கேஸரி யோகத்திற்குரிய பலன்கள் ஜாதகாதேசமென்ற ஜோதிஷ நூலில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஜாதகன் தனவானாகவும், புத்திமானாகவும், தன்னுடைய சொந்த குலத்திற்கு அதிபதியாகவும் அதாவது தன்னுடைய இன ஜனங்களுக்குள் பிரபலமுள்ளவனாகவும், கிராம, புர, நகர கர்த்தாவாகவும் (கிராமம், நகரம் இவைகளை ஏற்படுத்துகின்றவனாகவும்) ஆயிர மாதங்கள் ஜீவிப்பவனாகவு மிருப்பான். ஆயிர மாதங்கள் சொல்லியிருப்பதால் எண்பத்திமூன்று வருஷங்கள் வரையில் ஜீவிக்கக்கூடியவன். கணக்குப்படி ஆயிர மாதங்களுக்கு எண்பத்திமூன்று வருஷம் நான்கு மாதம் என்று துல்லியமாகப் பொருள் கொள்ள வேண்டியதில்லை என்பது சிலர் அபிப்ராயம்.

அதம, சம, வரிஷ்ட யோகங்கள்

சந்திரனுக்கும், சூரியனுக்கும் ஏற்படக்கூடிய ஒரு வகை சம்பந்தத்தைக் கொண்டு மூன்றுவித யோகங்கள் சொல்லப்படுகின்றன.

சூரியனுக்குக் கேந்திரத்தில் சந்திரனிருந்தால் அதம யோகமென்றும், பண பரத்திலிருந்தால் சமயோகமென்றும்; ஆபோகிலிமத்திலிருந்தால் வரிஷ்ட யோகமென்றும் சொல்லப்படும். அதாவது சூரியனுடன் சந்திரன் சேர்ந்திருந்தாலும், சூரியனிருக்கும் ராசியிலிருந்து சந்திரன் 4 அல்லது 7 அல்லது 10 ஆகிய கேந்திர ராசிகளிலிருந்தாலும் அதமயோக மெனப்படும். சூரியனிருக்கும் ராசியிலிருந்து 2 அல்லது 5 அல்லது 8 அல்லது 11 ஆகிய பணபரஸ்தானங்களில் சந்திரனிருந்தால் சமயோகமென்றும், சூரியனிருக்கும் ராசியிலிருந்து ஆபோகிலிம பாவங்களான 3 அல்லது 6வது அல்லது 9வது அல்லது 12வது ராசிகளில் சந்திரன் இருந்தால் வரிஷ்ட யோகமென்றும் சொல்லப்படும்.

விநயம், தனம், ஞானம், புத்தி இவைகள் அதம யோகத்தில் ஜனித்தவனுக்கு அற்பமாகவும், சம யோகத்தில் பிறந்தவனுக்கு சம நிலையிலும், வரிஷ்ட யோகத்தில் பிறந்தவனுக்கு பூர்ணமாகவு மிருக்கும்.

ஆயினும் சந்திரனிருக்கும் ராசி ஸ்திதியையும் கவனிக்க வேண்டும். தனுசில் சூரியனிருந்து அதற்கு 12வதான விருச்சிக ராசியில் சந்திரனிருப்பதனால் ஏற்படும் வரிஷ்ட யோகத்திற்கும் மிதுன ராசியிலிருக்கும் சூரியனுக்கு 12வதான விருஷப ராசியில் இருக்கும் சந்திரனால் ஏற்படும் வரிஷ்ட யோகத்திற்தும் பலன்கள் வித்தியாசப்படும் என்பதையும் கவனிக்கவும்.

சந்திரன் குருவினால் பார்க்கப்படும் பொழுது பகலில் பிறந்த ஜாதகன் தனிகனாவான், சந்திரன் சுக்கிரனால் பார்க்கப்படும் பொழுது இரவில் பிறந்த ஜாதகன் சுகியாக இருப்பான்.

ஸ்வ நவாம்சத்திலிருக்கும் சந்திரன் குருவினால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் தனிகனாகுவான். அதிமித்ர நவாம்சத்திலிருக்கும் சந்திரன் சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் சுகியாகுவான்.

சூரியனுக்கு சப்தம கேந்திரத்திலிருக்கும் சந்திரன் மூலம் அதம யோக மேற்படாதெனப் பராசரருடைய மதம். ஏனென்

ருல் சூரியனுக்கு 7வது ராசியில் சந்திரன் வரும்பொழுது பௌர்ணமி தினமாகையாலும் அன்று பூர்ண கலைகளுடன் பிரகாசிக்கிறவனாகவு மிருப்பதால் அன்று பிறந்தவனுக்கு அதம யோகமில்லை.

சந்திராதி யோகம்

சந்திரனுக்கு 6, 7, 8, இப் பாவங்களில் சுபக்ரஹங்கள் இருந்தால் அதியோகமாகும். அதியோகத்தை 7 விதமாகப் பிரிக்கப்படுகின்றது. ச்ருத கீர்த்தி என்ற மஹான் உபதேசிக்கிறதாவது:—

'நிதனம் த்யூனம் ஷஷ்டம் சந்த்ரஸ்தானாத்யதா சுபைர்யுக்தம்'
'அதியோகஸ் ஸ்புரோக்தோ வ்யாஸக்ருதேரி ஸப்ததாபூர்வை'

அதாவது சந்திரலக்னத் 6, 7, 8 இம் மூன்று பாவங்களிலும் சுபர்களாகிய குரு, சுக்கிரன், புதன் இவர்களிருப்பது ஒரு அதியோகம். இம் மூன்று சுபர்களும் சந்திரலக்னத் 6-வது 7-வது இவ் விருராசிகளிலும் இருப்பது இரண்டாவது அதியோகம். இம் மூன்று சுபர்களும் சந்திரலக்னத் 6-லும் 8-லுமிருப்பது 3-வது அதியோகம். இம் மூன்று சுபர்களும் சந்திரலக்னத் 7-லும் 8-லு மிருப்பது நான்காவது அதியோகம். இம் மூன்று சுபர்களும் சந்திர லக்னத் ஆறில் மட்டு மிருப்பது ஐந்தாவது அதியோகம்; 7-ல் மட்டும் இருப்பது 6-வது அதியோகம்; 8-ல் மட்டு மிருப்பது 7-வது அதியோகம்.

அதியோகத்தில் பிறந்தவன் மகா தனிகனாகவும், சுகியாகவும், சத்துரு ஜெயமுள்ளவனாகவும், ஆயுள் பலமுள்ளவனாகவும் இருப்பான். அதியோகத்தைக் கொடுக்கின்ற க்ரஹங்களான குரு, புதன், சுக்கிரன் இவர்கள் பூர்ண பலமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இச் சுபர்கள் பூர்ண பலமுள்ளவாயின் ஜாதகன் அரசனாகவும், மத்திம பல முள்ளவர்களாயின் மந்திரியாகவும், அற்ப பலமுள்ளவர்களாயின் சைன்ய நாயகனாகவும் அதாவது சேனாதிபதியாகவு மிருப்பான் என்று பாதராயணரும், பராசரரும் உபதேசிக்கிருர்கள்.

இது வரையில் சந்திரன் இருக்கும் ராசியை ப்ரதம ஸ்தானமாகக்கொண்டு சந்திரனுக்கு இரு பக்கமும் க்ரஹங்கள் இருப்பதைக் கொண்டும் இல்லாததைக்கொண்டும் 1 சுனபாயோகம் 2 அனபாயோகம் 3-துருதராயோகம் 4 கேமத் துரும யோகமும்,

சந்திரனுக்கும் குருவிற்கும் ஏற்படக்கூடிய பரஸ்பர சம்பந்தத்தைக்கொண்டு 1 கஜகேசரி யோகம் 2 சகடயோகம் ஆகிய இவ்விரண்டு யோகங்களும், சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஏற்படக்கூடிய சம்பந்தங்களை அதம 2 சம 3 வரிஷ்ட யோகங்களும், சந்திரனுக்கு 6, 7, 8-ல் குரு, புதன், சுக்கிரன் இவர்களின் ஸ்திதிகளைக் கொண்டு சந்திராதி யோகமும் சொல்லப்பட்டன. அதாவது சந்திரனைப் பிரதம ஸ்தானமாகக்கொண்டு 10 யோகங்கள் உபதேசிக்கப்பட்டன.

சூரியனுல் ஏற்படும் யோகம்

இனி சூரியனைக்கொண்டு சில யோகங்கள் உபதேசிக்கப்படுகிறது. சூரியனுக்கு 2-வது ராசியில் சந்திரன் நீங்கலாக வேறு சுப க்ரஹங்களிருந்தால் சுபவேசி யோகமென்றும், பாபக்ரஹங்களிருந்தால் பாபவேசி யோகமென்றும், சூரியனுக்கு 12 வது ராசியில் சந்திரனைத் தவிர்த்த வேறு சுபக்ரஹங்களிருந்தால் சுபவாசி யோகமென்றும், பாபிகளிருந்தால் பாபவாசி யோகம் என்றும், சூரியனுக்கு 2-லும் 12-லும் சந்திரனைத் தவிர்த்து மீதமுள்ள சுபக்ரஹங்களிருந்தால் சுப உபயசரி யோகம் என்றும், சூரியனுக்கு 2-லும் 12-லும் சந்திரன் நீங்கலாக மற்ற பாபக்ரஹங்கள் இருந்தால் பாப உபயசரி யோகம் என்றும் சொல்லப்படுகிறது.

சுபவேசி யோகத்தில் பிறந்தவன் நல்ல சீல முள்ளவனாகவும், வாக்மியாகவும், தனிகனாகவும், சத்துரு ஜெயமுள்ளவனாகவுமிருப்பான்.

பாபவேசி யோகத்தில் பிறந்தவன் துஷ்ட ஜனங்களுடன் சேர்ந்தவனாகவும், பாபத்தையே பண்ணுகின்றவனாகவும், தனம், சுகம் முதலானவை இல்லாதவனாகவு மிருப்பான்.

சுபவாசி யோகத்தில் பிறந்தவன் நிபுணனாகவும், தாராள ஸ்வபாவமுள்ளவனாகவும், பல வித சாஸ்திரங்களை ஆராய்ச்சி பண்ணுவதில் பற்றுள்ளவனாகவும், சுகம், தனம், கீர்த்தி, பலம் இவைகளுள்ளவனாகவு மிருப்பான்.

பாபவாசி யோகத்தில் பிறந்தவன் அதி மூர்க்கனாகவும், காமாதுரனாகவும், வேறு தேசங்களுக்கு கஷ்டங்காரணமாக ஓடிப்போகின்றவனாகவும், துர்முகியாகவு மிருப்பான்.

சுப உபயசரி யோகத்தில் பிறந்தவன் தனம், சுகம், ஒழுக்கம், ருயை இவைகளுடன் கூடின நரேந்திர துல்யர்களாக இருப்பார்கள்.

பாப உபயசரி யோகத்தில் பிறந்தவர்கள் பாப கிருத்தியங்களைப் புரிகின்றவர்களாகவும், ரோகாபீ பூதபர கர்மரதா தரித்திரா: அதாவது ரோகியாகவும், தரித்திரர்களாகவும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்கின்றவர்களாகவும் இருப்பார்கள்.

இதுவரை சொல்லிவந்த வேசி, வாசி, உபயசரி முதலிய யோகங்களுக்கு ஜாதகாதேசம், பராசர ஹோரை, ப்ல தீபிகை முதலான நூல்களில் வேறு விதமாகவும் பலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் அவைகளின் உட்கருத்துக்களில் யாதொரு முரண்பாடும் இல்லை.

லக்னத்தால் ஏற்படும் யோகம்

இனி லக்னத்தை முக்கிய ஸ்தானமாகக் கொண்டு சில யோர்கங்கள் உபதேசிக்கப்படுகிறது. லக்னத்தில் சுபன் இருந்தால் சுப யோகமென்றும், அசுபனிருந்தால் அசுப யோகமென்றும் சொல்லப்படும். லக்னத்திற்கு இருபுறங்களிலும் சுபர் இருந்தால் சுபகர்த்தரி யோகம் என்றும், பாபர்களிருந்தால் அசுபகர்த்தரி யோக மென்றும் சொல்லப்படும். லக்னத்திற்கு 2-ல் மட்டும் அசுபர் வீக்ஷணம் அற்ற சுபர் இருந்தால் ஸுசுபயோகமென்றும் சொல்லப்படும்.

சுபயோகத்தில் பிறந்தவன் வாக்மீயாகவும், ரூப, சீல, குணவானாகவு மிருப்பான்.

அசுப யோகத்தில் பிறந்தவன் காமியாகவும், பாப கர்மியாகவும், அந்நியர்களுடைய அன்னத்தையே புஜிக்கின்றவனாகவு மிருப்பான்.

சுபகர்த்தரி யோகத்தில் பிறந்தவன் தேஜஸ்வீயாகவும், பலவானாகவும், தனவானாகவு மிருப்பான்.

பாபகர்த்தரி யோகத்தில் பிறந்தவன் பாபியாகவும், பிச்சை எடுக்கின்றவனாகவும், அசுத்தமுள்ளவனாகவும் இருப்பான்.

ஸுசுப யோகத்தில் பிறந்தவன் ஆச்சாரவானாகவும், தர்மபற்றுள்ளவனாகவும், தெளிந்த புத்தியுள்ளவனாகவும், செ வானாகவும், அரசனால் வெகுமதிக்கத் தகுந்தவனாகவும், வான ஸ்வபாவமுள்ளவனாகவும், புன்சிரிப்புடன் பேசு னாகவும், பணமுள்ளவனாகவும் இருப்பான்.

இங்கு அநுபவ ரீதியாக சில விஷயங்களை ஆராய்வோம்:— ல தில் சுபர் இருந்தால் சுபயோகமென்று சொல்லப்ப கிறது. லக்னம் மகரமென்றும் அதில் குரு இருப்பதா

வைத்துக் கொள்வோம், லக்னம் கடகம் என்றும் அதில் குரு இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். மகரம், கடகம் இவ்விரண்டு லக்னங்களிலும் குருவின் ஸ்திதி மூலம் ஏற்படக்கூடிய சுபயோக பலன்கள் கடக லக்ன விஷயத்தில் குரு தனக்குரிய உச்ச ராசியில் இருப்பதன் காரணமாக உத்தம பக்ஷத்திலும், மகரத்தில் குரு தனக்குரிய நீச ஸ்தானத்தி லிருப்பதன் காரணமாக சுபயோகத்திற்குரிய சுப பலன்கள் மிகவும் அற்பமாகவும் நடைபெறுமென்று ஊகிக்கவேண்டும். ஆகையினால் எந்த சுபயோகம் எந்த க்ரஹமூலம் ஏற்படுகிறதோ அந்த க்ரஹம் தனக்குரிய சுப ராசியில் சுப நவாம்சத்தில் சுப சம்பந்த வீக்ஷணத்துடன் இருத்தல் அவசியமென தெய்வஜ்ஞர்கள் உபதேசிக்கிறார்கள். அதுபோலவே எந்த அசுபயோகம் எந்த க்ரஹமூலம் ஏற்படுகிறதோ அந்த க்ரஹம் தனக்குரிய அசுபராசியி லிருந்தால் அந்த அசுப யோகத்திற்குரிய தோஷபலன்கள் அதிகமாகவே நடைபெறும்; தனக்குரிய சுபராசி, சுபாம்சத்தில் இருந்தால் அசுப பலன்கள் ரொம்பவும் குறைந்தபடியாகவும் நடைபெறும். இனி சொல்லப்படும் க்ரஹ யோகங்களுக்கும் இம்மாதிரியாகவே பல நிர்ணயம் பண்ணுதல் நலம்.

லக்னாதி யோகம்

இதுவரை லக்னத்திலும், லக்னத்திற்கு இருபுறமும், லக்னத்திற்கு இரண்டாவது வீட்டிலு மிருக்கும் க்ரஹங்களைக் கொண்டு சுப, அசுப, சுபகர்த்தரி, பாபகர்த்தரி, ஸுசுப ஆக 5 யோகங்கள் சொல்லப்பட்டன. சந்திராதி யோகம் போலவே லக்னத்திற்கு 6, 7, 8 இப்பாவங்களிலிருக்கும் சுப க்ரஹங்களைக் கொண்டு லக்னாதி யோகமென்ற ஓர் சுபயோகம் உபதேசிக்கப்படுகிறது. சுக பாவ மென்ற லக்னாத் 4-வது பாவ நீங்கலாக மற்ற பாவங்களிலிருக்கும் அசுபர்களுடைய சேர்க்கை, பார்வை முதலான தோஷத்தை அடையாத லக்னாத் 6, 7, 8-ம் பாவங்களிலிருக்கும் சுபர்களால் லக்னாதி யோகமென்ற ஓர் சுபயோகமேற்படுகிறது.

லக்னாதி யோகத்தில் பிறந்தவன் பஹுசாஸ்திர கர்த்தாவாகவும், தத்துவ ஞானியாகவும், ராணுவத்தில் முக்கிய ஸ்தானத்தை வகிப்பவனாகவும், நிஷ்கபடியாகவும், மகாத்மாவாகவும், லோகத்தில் யஸஸு, தனம், குணம இவை உள்ளவனாகவும் இருப்பான்.

இதுவரையில் சந்திரனுக்கு இரு பக்கமு மிருக்கிற குஜாதி பஞ்ச க்ரஹங்கள் மூலம் ஏற்படுகின்ற சுனபா, அனபா, துருதரா, கேமதுரும என்ற யோகங்களும், சூரியனுக்கு இருபுறமும் குஜாதி பஞ்ச க்ரஹங்களின் ஸ்திதியைக் கொண்டு வேசி, வாசி, உபய சரி யோகங்களும், சூரியன் சந்திரன் இவ்விரு க்ரஹங்களின் ஒருவர்க்கொருவருடைய பரஸ்பர சம்பந்தத்தைக்கொண்டு அதம, சம, வரிஷ்ட யோகங்களும், சந்திரன் குரு இவ்விரு க்ரஹங்களின் பலவித சம்பந்தங்களைக் கொண்டு கஜகேசரி, சகட யோகங்களும் லக்னத்திலும் அதற்கு இருபுறங்களிலு மிருக்கும் க்ரஹங்களின் ஸ்திதியைக்கொண்டு சுப, சுபகர்த்தரி, அசுபகர்த்தரி, சுசுப யோகங்களும் லக்னத்திற்கு 6,7,8-ல் குரு, புதன், சுக்கிரன் இவர்களின் ஸ்திதியைக்கொண்டு லக்னாதி யோகமும், சந்திரனுக்கு 6, 7,8-ல் குரு, புதன், சுக்கிரன் இவைகளின் ஸ்திதியைக் கொண்டு சந்திராதி யோகமும் சொல்லப்பட்டன.

அமலா யோகம்

லக்னத்திற்கோ, சந்திர லக்னத்திற்கோ 10-வது பாவத்தில் சுபனிருந்தால் **அமலா யோகம்** என்று சொல்லப்படுகிறது. அமலா யோகத்தில் ஜனித்தவன் ராஜ பூஜ்யனாகவும், சௌக்கியவானாகவும், தாராளமான மனமுள்ளவனாகவும், பந்துஜன பிரியனாகவும், பரோபகாரியாகவும், குணவானாகவு மிருப்பான்.

பஞ்சமஹா புருஷயோகம்

குஜாதி பஞ்சக்ரஹங்களும் தங்களுக்குரிய ஸ்வக்ஷேத்திர, உச்ச, மூல திரிகோணராசிகளில் இருப்பதன்மூலம், பஞ்ச மஹா புருஷயோகம் என்ற வகுப்பில் சிலயோகங்கள் உபதேசிக்கப்படுகின்றன.

அங்காரகன் கேந்திர பாவத்தில் தனக்குரிய உச்ச, மூல திருகோண, ஆட்சி ராசியில் இருந்தால் **ருசக யோகம்** எனப் பெயர். ருசக யோகத்தில் பிறந்தவன் நீண்ட முகம் உள்ளவனாகவும், பிடிவாதக்காரனாகவும், ஜெயசீலனாகவும், ஏதாவது ஒரு வித்தையில் தேர்ச்சியுள்ளவனாகவும், மந்திர சித்தியுள்ளவனாகவும், ராஜதுல்லியனாகவும், நல்ல ரூபமுள்ளவனாகவும், தனமுள்ளவனாகவு மிருப்பான். மேலும் இவனுக்கு ஆயுசு 70 வருஷம்.

மேற்கூறியபடி புதனிருந்தால் **பத்ர யோகம்** எனப்படும். பத்ர யோகத்தில் பிறந்தவன் நீண்ட ஆயுள் உள்ளவனாகவும், புத்திமா

னாகவும், பண்டிதர்களால் புகழப்பட்டவனாகவும், வாக்மீயாகவும், 80 வயதுள்ளவனாகவு மிருப்பான்.

மேற்கூறியபடி குரு இருந்தால் **ஹம்ச யோகம்** எனப்படும். ஹம்ச யோகத்தில் பிறந்தவன் தார்மீகனாகவும், அழகிய சரீரமுள்ளவனாகவும், சுகியாகவும், சாஸ்த்ரஜ்ஞான முள்ளவனாகவும், 82-வயதுவரை ஜீவிப்பவனாகவுமிருப்பான்.

மேற்கூறியபடி சுக்கிரனிருந்தால் **மாளவயோகம்** என்று சொல்லப்படுகிறது. மாளவ யோகத்தில் ஜனித்தவன் புஷ்டி சரீர முள்ளவனாகவும், தனமுள்ளவனாகவும், களத்திர புத்திர சுக முள்ளவனாகவும், வித்வானாகவும், மனஸ்வீயாகவும், 77 வயது ஆயுள் பலம் உள்ளவனாகவு மிருப்பான்.

மேற்கூறியபடி சனி இருந்தால் **ஸஸயோகம்** எனப்படும். ஸஸ யோகத்தில் பிறந்தவன் நற்கீர்த்தியுள்ளவனாகவும், ஒரு கிராமத்திற்கோ, நகரத்திற்கோ முக்கியஸ்தனாகவும் இருப்பான். ஆனால் அதிகாமியாகவும், கோபியாகவும், பரஸ்திரீ கமனமுள்ளவனாகவும் இருப்பான். இவனுக்கு 70 வயது ஆயுள் பலம்.

விசேஷ விதி

பஞ்ச மகா புருஷ யோகங்களுக்குரிய இங்கு சொல்லி வந்த பலன்கள் பராசரஹோரை, பலதீபிகை, ஜாதக பாரிஜாதம் ஆகிய இம்மூன்று நூல்களிலும் உபதேசித்துள்ள விஷயங்களைச் சங்க்ரகமாகச் சொல்லப்பட்டது. எந்தயோகம் எந்த க்ரஹத்தினால் ஏற்படுகின்றதோ அந்த யோகத்திற்குரிய சுப பலன்கள் அந்தக் கிரஹம் சூரியனில் அஸ்தங்க தோஷத்தை அடையாமலும், ராகு கேதுக்களுடன் சேராமலும் இருந்தால் தான் நடைபெறும்.

எல்லா சுபக் கிரஹங்களும் லக்னத்தினின்றும் உபய ராசிகளான 3,6,10,11-வது ராசிகளுக்குள் இருந்தால் **வசுமான்** என்ற யோகமாகும். இவ்விதமே சந்திர லக்னரீதியாகவு மிருக்கலாம். வசுமான் என்ற யோகத்தில் ஜனித்தவன் தனிகனாக இருப்பான்.

ஜென்ம லக்னாதிபதியும் சந்திர லக்னாதிபதியும் சேர்ந்து கேந்திரத்திலோ அதிமித்திரன் வீட்டிலோ யிருப்பதுடன் லக்னத்திலும் ஒரு கிரஹம் பலத்துடனிருந்தால் **புஷ்கலம்** என்ற யோகமாகும். புஷ்கல யோகத்தில் பிறந்தவன் நற்கீர்த்தியுள்ளவனாகவும், தன்னை அலங்கரித்துக்கொள்வதில் பிரியமுள்ளவனாக

வும், நல்ல வார்த்தைகளையே பேசுபவனாகவும், சிறந்த புருஷனாகவு மிருப்பான்.

எல்லா கிரஹங்களும் 5,6,7 இந்த ராசிகளில் வரிசையாயிருந்தால் சுபமாலா யோகமாகும். சுபமாலா யோகத்தில் பிறந்தவன் ஜனாதிகாரியாகவும், அரசர்களால் புகழப்பட்டவனாகவும், மற்றவர்களுடைய காரியத்தைப் பொறுப்பாகப் பார்க்கின்றவனாகவும், பந்துப் பிரியனாகவும், களத்திரபுத்திர சுகமுள்ளவனாகவும், தீரனாகவும் இருப்பான்.

எல்லா கிரஹங்களும் 6,8,12-வது ராசிகளில் வரிசையாக இருந்தால் அசுபமாலா யோகமாகும். அசுபமாலா யோகத்தில் பிறந்தவன் கெட்ட வழியில் செல்லுகின்றவனாகவும், துக்கியாகவும், பிறரைக் கஷ்டப் படுத்துகின்றவனாகவும், நன்றியில்லாதவனாகவும், பிரும்மதுவேஷம் பண்ணுகின்றவனாகவும், கலகப் பிரியனாகவும், உலகத்தாரால் நிந்திக்கப்பட்டவனாகவு மிருப்பான்.

பாக்யாதிபதியும், சுக்கிரனும் கேந்திர திருகோண பாவங்களில் தங்களுக்குரிய உச்ச அல்லது சொந்த ராசிகளில் இருந்தால் லக்ஷ்மி யோகமாகும். லக்ஷ்மி யோகத்தில் பிறந்தவன் ரோகமற்றவனாகவும், தனிகனாகவும், தேஜஸ்வீயாகவும், பந்துக்களை ரக்ஷிக்கின்றவனாகவும், வாகன சுகமுள்ளவனாகவும், ராஜ ஸ்ரேஷ்டனாகவும் ஆவான்.

கேந்திரத்திலோ திருகோணத்திலோ தனக்குரிய ஆட்சி அல்லது உச்ச ராசியில் இருக்கின்ற சந்திரன் குருவினால் பார்க்கப் பட்டிருந்தால் கௌரி யோகமாகும். கௌரீ யோகத்தில் பிறந்தவன் நல்ல தேகமுள்ளவனாகவும், அரசனுடைய மித்திரனாகவும், சத்புத்திரன் உள்ளவனாகவும், மலர்ந்த முகமுள்ளவனாகவும், புகழப்பட்ட வம்சமுள்ளவனாகவும் இருப்பான்.

சுக்கிரன், குரு, புதன் இவர்கள் கேந்திரம் திருகோணம் இரண்டாவது பாவம் இவற்றில் இருப்பதுடன் குரு தனக்குரிய உச்சராசியிலோ, சொந்த வீட்டிலோ, பலம் பெற்றிருந்தால் சரஸ்வதி யோகமாகும். சரஸ்வதி யோகத்தில் பிறந்தவன் புத்திமானாகவும், நாடக கத்யபத்ய கணக்கு அலங்கார சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவனாகவும், மிகுந்த கீர்த்தியுள்ளவனாகவும், பணக்காரனாகவும், தாரபுத்திர சுகமுள்ளவனாகவும், பாக்யவானாகவும் இருப்பான்.

லக்னாதிபதியும், சூரியனும், சந்திரனும் தங்களுக்குரிய சுப ராசிகளில் கேந்திர திருகோணபாவங்களில் இருந்தால் ஸ்ரீகண்ட யோகமாகும். இந்த யோகத்தில் பிறந்தவன் மகாத்மாவாகவும், மகா சிவபக்தனாகவு மிருப்பான்.

தர்மாதிபதியான ஒன்பதாவது பர்வாதிபதியும், சுக்கிரனும், புதனும் கேந்திர திருகோண பாவங்களில் தங்களுக்குரிய சுப ராசிகளில் இருந்தால் ஸ்ரீ நாதயோகமாகும்: இந்த யோகத்தில பிறந்தவன் தனிகனாகவும், அழகாய்ப் பேசுகின்றவனாகவும், விஷ்ணுபக்தனாகவும், அழகிய சரீரமுள்ளவனாகவும், களத்திர புத்திர சுகமுள்ளவனாகவு மிருப்பான்.

லக்னாதிபதியும், புத்திகாரனாகிய குருவும் ஆயுஷ்காரகனாகிய சனியும் கேந்திர திருகோண பாவங்களில் தங்களுக்குரிய ஆட்சி உச்ச ராசிகளில் இருந்தால் வைரிஞ்சி யோகம் எனப்படும். இந்த யோகத்தில் ஜனித்தவன் பிரும்மவித்தியாவில் பற்று உள்ளவனாகவும், மகா புத்திமானாகவும், வேதத்தையே பிரதானமாக உடையவனாகவும் அதாவது வேத விதிப்படி நடக்கின்றவனாகவும், ஜிதேந்திரியவானாகவும், அரசர்களால் வணங்கப்பட்டவனாகவு மிருப்பான்.

சுபர்கள் கேந்திரங்களில் இருக்கவேண்டும். 6,8 இடங்கள் சுத்தமாய் இருக்கவேண்டும். அல்லது அவைகளிலும் சுபர்கள் இருக்க வேண்டும். இப்படி யிருந்தால் பர்வத யோகம். லக்னாதிபதியும் விரையாதிபதியும் ஒருவருடைய கேந்திரத்தில் மற்றொருவரிருந்து மித்ருக்களால் பார்க்கப்பட்டாலும் பர்வதயோக மெனப்படும். பர்வதயோகத்தில் பிறந்தவன் பாக்யவானாகவும், வித்தையுள்ளவனாகவும், பரஸ்திரி கமனம் பண்ணுகின்றவனாகவும், ஆயினும் யஸஸ்வீயாகவும், ஒரு நகரத்திற்கு நாயகனாகவுமிருப்பான். நகரத்துக்கு நாயகன் என்பதைத்தற்கால நிலமையில் முனிசிபல் சேர்மன் என்றும் வைத்துக்கொள்ளலாம்.

ஜாதகா தேசம் என்ற அழகிய நூலில் பர்வத யோகத்துக்குப் பலன்கள் பின்வருமாறு சொல்லப்பட் டிருக்கிறது.—பூபாலனாகவும், தர்மவானாகவும், கிராமபுர நகர கர்த்தாவாகவும், கீர்த்திமானாகவும் பர்வதயோகத்தில் ஜனித்தவன் இருப்பான்.

லக்னாதிபன் இருக்கிற வீட்டுக்குடையவன் தனக்குரிய உச்ச ஆட்சி வீட்டில் கேந்திர திருகோண பாவத்தில் இருந்தாலும் பர்வதயோகம் என்று சொல்லப் படுகிறது.

சூரியன், சந்திரன், லக்னம் இம்மூன்றும் ஒற்றைப்பட்ட ராசிகளில் (அதாவது மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம்) இருக்கும்போது பகலில் பிறந்த புருஷனுக்கு மஹா பாக்ய யோக முண்டு.

இரவில் இரட்டைப்பட்ட ராசியில் இராத்திரி காலத்தில் பிறந்த ஸ்திரீயின் ஜாதகத்தில் சூரியனும் சந்திரனும் இரட்டைப் பட்ட ராசிகளிலிருந்தாலும் மகா பாக்ய யோகம்.

மகா பாக்ய யோகத்தில் பிறந்தவர்கள் கொடையாளிகளாகவும், பிரசித்தி பெற்றவர்களாவும், உயர்ந்த குணங்கள் உள்ளவர்க ளாகவும், எண்பது வயதுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த யோகத்தில் பிறந்த ஸ்திரீகள் மாங்கல்ய பலத்துடன், தன புத்திர சுகமுள்ளவர்களாகவும், பதிபக்தி யுள்ளவர்களாக வும் இருக்கிறார்கள்.

சூரியனுக்கு இரண்டில் புதனும், புதனுக்கு லாப பாவமாகிய 11வது ராசியில் சந்திரனும், சந்திரனுக்கு திருகோண பாவத்தில் குருவும் இருந்தால் பாஸ்கர யோக மென்று சொல்லப்படும். பாஸ் கர யோகத்தில் பிறந்தவன் சூரனாகவும், பிரபு சமனாகவும், சாஸ் திரங்களில் தேர்ச்சியுள்ளவனாகவும், ரூபவானாகவும், காந்தர்வ ஸ்ருதியுள்ளவனாகவும், (அதாவது நல்ல பாடகனாகவோ இனிய குரலுள்ளவனாகவோ), கணிதத்தில் தேர்ச்சியுள்ளவனாகவும், சமர்த்தனாகவும், தீரனாகவும் இருப்பான்.

பாஸ்கர யோகத்தில் பிறந்தவர்கள் வக்கீல்களாகவும், ஆடிட் டர்களாவும், வேதாந்தம், புராணம் இவற்றைப் பலர் புகழத் தக்க முறையில் உபன்யாசம் பண்ணுகின்றவர்களாகவு மிருக் கிறார்கள். ஆத்ம காரகனாகிய சூரியனுக்கு இரண்டில் வாக்குக் காரகனாகிய புதனும், மனஸ் காரகனாகிய சந்திரனுக்கு தீர ஸ்தா னமாகிய மூன்றாவது பாவத்தில் வித்யா காரகனாகிய புதனும், மனஸ் காரகனாகிய சந்திரனுக்கு புத்திக் காரகனாகிய குருவி னுடைய திருஷ்டியும் அமையக் கூடியதால் இந்தக் கிரஹங்க ளுடைய காரகங்களைக் கொண்டு இங்கு கூறிய விசேஷ பலன்கள் சொல்லப்பட்டன வென்று ஊகிக்கலாம்.

இதற்கு ஒரு உதாரணம்:—



பாஸ்கர யோகத்திற்கு உப தேசித்துள்ள முறைப்படி இக் குண்டலியில் கிரஹங்கள் அமைக் கப்பட் டிருக்கின்றன. குரு, சந் திரனுக்கு மற்றொரு திரிகோண ராசியாகிய விருச்சிக ராசியில் இருந்தாலும் பாஸ்கர யோகம். இக் குண்டலியில் கிரஹங்கள் தங்களுக்குரிய சுப ராசிகளில் இருப்பதால் பாஸ்கர யோகத்திற் குரிய பலன்கள் பூர்ணம்சத்தில் நடைபெறும்.

மனஸ் காரகனாகிய சந்திரனுக்கு விக்கிரம ஸ்தானமான மூன்றாவது ராசியில் தைரியக்காரகனாகிய அங்காரகனும், அங் காரகனுக்கு சப்தமத்தில் ஆயுஷ்காரகனாகிய சனியும், சனிக்கு சப்தமத்தில் அசுர குருவாகிய சுக்கிரனும், சுக்கிரனுக்கு சப்த மத்தில் தேவகுருவாகிய பிரகஸ்பதியு மிருந்தால் இந்திர யோக மெனப்படும்.

இங்கு காட்டிய கிரஹஸ்திதி கள் இந்திர யோகத்துக்கு உதா ரணமாகும்.

இந்திர யோகத்தில் பிறந்த வன் கியாதி யுள்ளவனாகவும், பவியமுள்ளவனாகவும், சீலமுள்ள வனாகவும், ராஜ துல்யனாகவும், வாக்மீயாகவும், தனிகனாகவும், பூஷணங்களுள்ளவனாகவும், நல்ல ரூபமுள்ளவனாகவும், தீரனாகவு மிருப்பான்.



அசுர குருவாகிய சுக்கிரனுக்கு தேவ குருவாகிய பிரகஸ்பதி திருகோண ராசியிலும், குருவிற்கு புத்தி ஸ்தானமாகிய 5வது ராசியில் சந்திரனும், சந்திரனுக்கு கேந்திரத்தில் சூரியனு மிருந் தால் மருத் யோக மெனப்படும்.

இக் குண்டலியில் இருக்கிற கிரஹஸ்திதிகள் மருத் யோகத்துக்கு உதாரணமாகும்.

	சுக்		
	ராசி		
			குரு
சந்			சூரி

மருத் யோகத்தில் பிறக்கிறவன் வாக்மீயாகவும், விசால ஹிருதயமுள்ளவனாகவும், பெரிய வயிறுள்ளவனாகவும், சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவனாகவும், சுகியாகவும், கிரய விக்கிரயம் பண்ணுவதில் சாமர்த்தியமுள்ளவனாகவும், அரசனாகவோ், அரசசமானனாகவோ யிருப்பான்.

லக்னத்தில் குருவும், குருவிற்கு கேந்திரத்தில் சந்திரனும், சந்திரனுக்கு 2ல் ராகுவும், மூன்றில் சூரியனும் அங்காரகனும் இருந்தால் **புத யோக** மெனப்படும்.

இங்கே மேஷ லக்னமென வைத்துக்கொண்டு **புத** யோகப்படி கிரஹஸ்திதிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

சூரி குஜ	லக் குரு		
ராகு	ராசி		
சந்தி			

புத யோகத்தில் பிறந்தவன் அரசனைப்போல் உள்ளவனாகவும், பரந்த கீர்த்தி யுள்ளவனாகவும், சர்ஸ்திரக்ஞனாகவும், கிரய விக்கிரயாதிகளில் சதுரனாகவும், புத்திமானாகவும், சத்துருவற்றவனாகவுமிருப்பான். மேல் காட்டிய உதாரணத்தில் குருவிற்கு கேந்திரத்தில் சந்திரனிருக்க வேண்டுமென்றபடி சந்திரனை தசம கேந்திரத்தில் போட்டிருப்பினும், மற்ற கேந்திரங்களிலும் சந்திரனைப் போட்டு சந்திரனுக்கு 2ல் ராகுவையும், 3ல் சூரிய, குஜர்களையும் போட்டுக் கொள்ளலாம்.

அறுபத்தாறு பரிவர்த்தன யோகங்கள்

இரண்டு கிரஹங்கள் ஒருவருடைய ராசியில் மற்றொருவராக மாறி யிருந்தால் பரிவர்த்தன யோக மென்று சொல்லப்படும். இப்படி 66 பரிவர்த்தன யோகங்கள் எற்படக்கூடும்.

தைந்நிய யோகம்

விரையாதிபதியான 12-வது பாவாதிபதி மற்ற 11 பாவங்களுள் ஏதாவது ஒரு பாவத்திலிருந்து அப்பாவாதிபதி விரைய பாவத்தில் யிருப்பதன் மூலம் 11 யோகங்களேற்படும்.

சத்துரு ஸ்தானாதிபதியாகிய 6 வது பாவாதிபதி 6ம் இடம் 12ம் இடம் தவிர மற்ற 10 பாவங்களுள் ஒன்றிலும் அப்பாவாதிபதிகள் 6லும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் 10 யோகங்களேற்படும்.

8க்குடையவன் இம்மாதிரியே 8,6,12ம் இடம் தவிர்த்து மற்ற பாவாதிபதிகளுடன் பரிவர்த்தனம் பெற்றிருக்கக் கூடியதின் மூலம் 9 யோகங்களேற்படும். ஆக இந்த சத்துருஸ்தானாதிபதியாகிய 6வது பாவாதிபதி விரைய ஸ்தானாதிபதியாகிய 12வது பாவாதிபதி, மிருத்யு ஸ்தானாதிபதியாகிய 8வது பாவாதிபதி, ஆக இம்மூன்று பாவாதிபதிகள் மூலம் ஏற்படும் யோகங்கள் (11+10+9) மொத்தம் 30; இந்த 30 யோகங்களும் தைந்நிய யோகங்களெனப்படும்.

கல யோகங்கள்

மூன்றுவது பர்வாதிபதிக்கு 3,6,8,12 தவிர மற்ற 8 பாவாதிபதிகளுடன் எற்படக்கூடிய 8 வித பரிவர்த்தன யோகங்களுக்கு கல யோகங்களெனப் பெயர்.

மகா யோகங்கள்

லக்னாதிபன் 2,4,5,7,9,10,11 இப்பாவங்களிலும் இப்பாவாதிபதிகள் லக்னபாவத்திலுமாக மாறியிருத்தல் மூலம் 7 யோகங்களும், தனாதிபதியாகிய 2வது பாவாதிபதி 4,5,7,9,10,11 இப்பாவங்களிலும் இப்பாவாதிபதிகள் தனபாவத்திலுமாக மாறியிருத்தல் மூலம் 6 யோகங்களும், சுகாதிபதியான 4 வது பாவாதிபதி 5,7,9,10,11 இப்பாவங்களிலும் இப்பாவங்களின் அதிபதிகள் தன பாவத்திலுமாக மாறியிருத்தலின் மூலம் 5 யோகங்களும் புத்திர ஸ்தானாதிபதியாகிய 5வது பாவாதிபதி 7,9,10,11 இப்பாவங்களிலும் இப்பாவாதிபதிகள் 5 வது பாவத்திலுமாக மாறியிருத்தல் மூலம் 4 யோகங்களும், களத்திராதிபதியாகிய 7 வது பாவாதிபதி 9,10,11 பாவங்களிலும், இப்பாவாதிபதிகள் களத்திர பாவத்திலுமாக மாறி யிருத்தல் மூலம் 3 யோகங்களும், பாக்யாதி பதியாகிய 9ம் பாவாதிபதி 10,11ம் பாவங்களிலும் இப்பாவாதிகள் பாக்கியத்திலுமாக மாறி யிருத்தல் மூலம் 2 யோகங்

களும், ராஜ்யாதிபதியாகிய 10வது பாவாதிபதி 11வது பாவத்திலும் 11வது பாவாதிபதி 10வது பாவத்திலுமாக மாறியிருத்தல் மூலம் 1 யோகமும் ஆக மொத்தம் 28 சுபயோகங்களுக்கும் மகா யோக மெனப்படும்.

தைந்நிய யோகத்தில் பிறந்தவன் மூர்க்கனாகவும், குற்றம் சொல்லுகின்றவனாகவும், பாபகாரியங்களையே செய்கின்றவனாகவும், சத்துரு பீடிதவானாகவும், கடுமையாய்ப் பேசுகின்றவனாகவும் ஸ்திரமான புத்தியில்லாதவனாகவு மிருப்பான்.

கலயோகத்தில் பிறந்தவன் ஒரு சமயம் கடுமையாகவும், ஒரு சமயம் சாத்வீகமாக பேசுகின்றவனாகவும், ஒரு சமயம் எல்லாவித சுகத்தையும் அடைகின்றவனாகவும், ஒரு சமயம் பலவிதக் கஷ்டங்களையும் அடைகின்றவனாகவும் இருப்பான்.

மகா யோகத்தில் பிறந்தவன் மகாதனிகனாகவும், அரசனுடைய சிநேகமுள்ளவனாகவும், ஆக்ஞை செய்யும் சக்தியுள்ளவனாகவும், புத்திர பாக்யத்துடன் கூடினவனாகவு மிருப்பான்.

சாமர யோகம்

லக்னாதிபதி 6,8,12ம் இடம் தவிர மற்ற பாவங்களில் இருப்பதுடன் லக்னத்திற்கும் சுபதிருக் பலம் இருப்பின் சாமர யோக மெனப்படும். இம்மாதிரி 2ம் பாவமும் அதன் அதிபதியுமிருந்தால் தேனு யோக மெனப்படும். இம்மாதிரி 3ம் பாவமும் அதன் அதிபதியு மிருந்தால் சௌரி யோக மெனப்படும். இதே மாதிரி 4ம் பாவமும் அதன் அதிபதியுமிருந்தால் அம்புதி யோக மெனப்படும். இம்மாதிரி 5ம் பாவமும் அதன் அதிபதியுமிருந்தால் சந்திர யோக மெனப்படும். 6ம் பாவமும் அதன் அதிபதியும் இப்படியிருந்தால் அஸ்திர யோகம் எனப்படும். ஏழாம் பாவமும் அதன் அதிபதியும் இப்படி யிருந்தால் காம யோக மெனப்படும். அஷ்டம பாவமும் அதன் அதிபதியும் இப்படி யிருந்தால் அசுரயோக மெனப்படும். பாக்ய பாவமும் அதன் அதிபதியும் இப்படி யிருந்தால் பாக்ய யோக மெனப்படும். 10வது பாவமும் அதன் அதிபதியும் இப்படியிருந்தால் கியாதி யோக மெனப்படும். லாப பாவமும் அதன் அதிபதியும் இப்படியிருந்தால் பாரி ஜாத யோக மெனப்படும். விரைய பாவமும் அதன் அதிபதியும் இப்படியிருந்தால் முசல யோக மெனப்படும்.

சாமர யோகத்தில் பிறந்தவன் தனம், சீலம், நீண்ட ஆயுள், நற்கீர்த்தி இவை உள்ளவனாக இருப்பான்.

தேனு யோகத்தில் பிறந்தவன் வித்தியா பலமுள்ளவனாகவும் தனிகனாகவு மிருப்பான்.

சௌரிய யோகத்தில் பிறந்தவன் கீர்த்தியுள்ள உடன் பிறந்தோர்களால் புகழப்பட்டவனாகவும், பராக்கிரமியாகவும், யஸஸ்வியாகவு மிருப்பான்.

அம்புதி யோகத்தில் பிறந்தவன் பசு, நல்ல வீடு, நிலைத்த சுகம், இவைகளுள்ளவனாக இருப்பதுடன் கிணறு, தண்ணீர்ப் பந்தல் இவற்றை அமைப்பவனாகவு மிருப்பான்.

சந்திர யோகத்தில் பிறந்தவன் புத்திர பாக்கியம், கூர்மையான புத்தி, நற்கீர்த்தி, தனம் இவை உள்ளவனாக இருப்பான்.

அஸ்திர யோகத்தில் பிறந்தவன் சத்துருக்களை அடக்கும் சக்திவாய்ந்தவனாகவும், விவாதம் செய்பவனாகவும், திட தேகியாகவுமிருப்பான்.

காம யோகத்தில் பிறந்தவன் காமத்தை அடக்குகின்றவனாகவும், உயர்ந்த குணங்களுள்ளவனாகவும் நல்ல குடும்பமுள்ளவனாகவுமிருப்பான்.

அசுர யோகத்தில் பிறந்தவன் பணக்கஷ்டங்களுள்ள வனாகவும், தன் நலம் கருதுகின்றவனாகவும், அடுத்தவரைக் கெடுக்கின்றவனாகவு மிருப்பான்.

பாக்ய யோகத்தில் பிறந்தவன் மகா ஜனங்களால் வணங்கப்பட்டவனாகவும், தார்மீகனாகவு மிருப்பான்.

கியாதி யோகத்தில் பிறந்தவன் உலகில் பிரசித்தனாக இருப்பான்.

பாரிஜாத யோகத்தில் பிறந்தவன் நல்ல குடும்பியாகவும், வித்வானாகவும் அதிகமான தனவரவுகள் உள்ளவனாகவு மிருப்பான்.

முசல யோகத்தில் பிறந்தவன் கஷ்டப்பட்டுச் சம்பாத்தியம் பண்ணுகின்றவனாகவும், உசிதமான செலவு செய்யும்குணமுள்ளவனாகவும், ஒரு சமயம் அவமதிக்கப்பட்டவனாகவு மிருப்பான்.

லக்னம் முதலிய பாவாதிபதிகள் 6,8,12 முதலான இடங்களில் இருப்பதுடன் அப்பாவங்களுக்கும் அசுப சம்பந்தம், திருஷ்டி இவை யிருப்பின் லக்னம் முதல் வரிசைக் கிரமமாக (1) அவயோகம் (2) நிஸ்வயோகம் (3) மிருதியோகம் (4) குஹுயோகம் (5) பாமர யோகம் (6) ஹர்ஷயோகம் (7) துஷ்கிருதியோகம் (8) ஸரளயோகம் (9) நிர்பாக்ய யோகம் (10) துர்யோகம் (11) தரித்திர யோகம் (12) விமலயோகம் என 12 யோகங்கள் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன.

அவ்வயோகத்தில் பிறந்தவன் பிரசித்தி யற்றவனுகவும் பல மற்ற சரீர முள்ளவனுகவும், சஞ்சலமான நிலையுள்ளவனுகவுமிருப் பான்.

நிஸ்வ யோகத்தில் பிறந்தவன் நல்ல வார்த்தை பேசாதவ னுகவும், குடும்பக் கவலைகளுள்ளவனுகவும், பற்கள் கண்கள் இவைகளில் தோஷ முள்ளவனுகவும் பணகஷ்ட முள்ளவனுகவு மிருப்பான்.

மிருதி யோகத்தில் பிறந்தவன் சகோதர தோஷமுள்ளவனுக வும் கெட்ட குணமுள்ளவனுகவு மிருப்பான்.

குஹூ யோகத்தில் பிறந்தவன் தாய் சுகமில்லாதவனுகவும், பரஸ்திரி கமனனுகவுமிருப்பான்.

பாமர யோகத்தில் பிறந்தவன் வஞ்சகனுகவும், புத்திர தோஷ முள்ளவனுகவு மிருப்பான்.

ஹர்ஷ யோகத்தில் பிறந்தவன் சத்துருவை நாசம் செய்கின்ற வனுகவும், பலர்களுக்கு தலைவனுகவும், நல்ல சரீரமுள்ளவனுகவு மிருப்பான்.

துஷ்கிருதி யோகத்தில் பிறந்தவன் களத்திர சோகமுள்ளவ னுகவும், குஹ்யரோக முள்ளவனுகவு மிருப்பான்.

ஸரள யோகத்தில் பிறந்தவன் ஆயுள் பலமுள்ளவனுகவும், சத்துரு ஜெயமுள்ளவனுகவு மிருப்பான்.

நிர்பாக்ய யோகதில் பிறந்தவன் பிதுர் தனத்தை இழக்கின் றவனுகவும், பாவப் பற்றுள்ளவனுகவும், தரித்திரனுகவு மிருப் பான்.

துர் யோகத்தில் பிறந்தவன் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்ற வனுகவும், வெளி தேசங்களில் அலைந்து திரிகின்றவனுகவு மிருப் பான்.

தரித்திர யோகத்தில் பிறந்தவன் கடன் படுகின்றவனுகவும், காதில் ரோகமுள்ளவனுகவும், பிறர்க்கு அடிமைப் பட்டவனுக வும், ஜ்யேஷ்ட பிராத்ரு சிநேக மற்றவனுகவு மிருப்பான்.

விமல யோகத்தில் பிறந்தவன் கொஞ்சமாகச் செலவு செய் கின்றவனுகவும், சுகியாகவும், தனிகனுகவு மிருப்பான்.

பாக்யாதிபதியும் சுகாதிபதியும் ஒருவர் கேந்திரத்தில் மற் ருெருவர் பலத்துடனிருப்பதுடன் லக்னுதிபதியும் பலத்திருந் தால் காஹல யோக மெனப்படும்.

நான்காவது பாவாதிபதி ஸ்வக்ஷேத்திர கதனுகவோ, உச் சனுகவோ யிருந்து பத்தாவது பாவாதிபதியுடன் சேர்ந்தோ அவனல் பார்க்கப்பட்டோ இருந்தாலும் காஹலயோக மெனப்படும்.

மந்திரேஸ்வரர் லக்னுதிபதியிருக்கின்ற ராசிக்கு நாதன் எந்த ராசியிலிருக்கின்ருனே அந்த ராசியாதிபதி தனக்குரிய சுப பாவத்தில் இருந்தால் காஹலயோக மென்று உபதேசிக்கிருர்.

காஹல யோகத்தில் பிறந்தவன் ஓஜஸ்வீயாகவும், சாகசியாக வும், மூர்க்கனுகவும் பல கிராமங்களும் சையன்யங்களும் உள்ள வனுகவு மிருப்பான்.

ஆயினும் ஜாதகா தேசம் என்ற நூலில் காஹல யோகத்தில் பிறந்தவனுக்கு உபதேசித் திருக்கிறதாவது:—வித்யா வினய முள்ளவனுகவும், ரூபமுள்ளவனுகவும், ஜிதேந்திரியனுகவும், ஆக் ஞாபரனுகவும், மகா சுகியாகவு மிருப்பான்.

பல தீபிகையில் காஹல யோகத்திற்கு உபதேசித்திருக்கிற பலன்களாவன:—

பூஜிக்கத் தகுந்தவனுகவும், புத்திமானுகவு மிருப்பான். க்ஷேமத்தையே செய்கின்றவனுகவும், ஜனங்களால் கொண்டாடப் பட்டவனுகவு மிருப்பான்.

மாலிகா யோகம்

லக்ன முதல் ஆதித்யாதி ஏழு கிரஹங்களும் ஏழு ராசிகள் வரையில் இருந்தால் மாலிகா யோக மெனப்படும். இந்த யோகத் தில் பிறந்தவன் அநேக கஜ அசுவங்களுள்ள மஹீபதி யாவான்.

ஏழு கிரஹங்களும் தனபாவமான 2வது பாவமுதல் 7 ராசி கள் வரையிலிருந்தால் இது ஒரு மாலா யோகமாகும். கிரஹங் கள் இவ்வாறு இருக்கும் பொழுது ஜனித்தவன் பெரும் தனிக னுகவும், பிதுர் பக்தியுள்ளவனுகவும், தீரனுகவும், குணவானுக வும், சக்கிரவர்த்தியாகவு மிருப்பான்.

ஏழு கிரஹங்களும் மூன்ரும் பாவம் முதல் ஏழு ராசிகளிலு மிருந்தால் ஜாதகன் சூரனுகவும் தனிகனுகவு மிருப்பினும் ரோகி யாவான்.

சுக ஸ்தானமான 4வது ராசி முதல் 7 கிரஹங்களு மிருக்கப் பிறந்தவன் பல தேசங்களை ஆளுகின்ற அரசனுக இருப்பான்.

புத்திர பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரகங்களு மிருக்கும் பொழுது பிறந்த மாலிகா யோகமுள்ள ஜாதகன் பல யாக யக்ஞங்களை பண்ணின கீர்த்தியுள்ள அரசனுவான்.

ஆருவது பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரஹங்களு மிருக்கப் பிறந்த மாலிகா யோக ஜாதகன் தரித்திரன்; தனது வாழ் நாட்களில் கொஞ்ச காலம் தனமும் சுகமு முள்ளவன்.

களத்திர பாவ முதல் 7 கிரஹங்களும் 7 ராசிகளிலிருக்கப் பிறந்த மாலிகா யோகமுள்ள ஜாதகன் வெகு ஸ்திரீகளுள்ள அரசனுவன்.

அஷ்டம பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரஹங்களுமிருக்கப் பிறந்த ஜாதகன் சிறந்த குணங்களுள்ளவனுகவும், தபஸ்வியாக வும், யஸஸ்வீயாகவும், விபுவாகவு மிருப்பான்.

கர்ம பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரஹங்களுமிருக்கப் பிறந்தவன் தர்ம கர்ம முள்ளவனுகவும், ஸஜ் ஜனங்களால் பூஜிக் கப்பட்டவனுகவும் இருப்பான்.

லாப பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரஹங்களுமிருக்க பிறந்த மாலிகா யோகமுள்ளவன் அழகுள்ள ஸ்திரீகளுக்கு பதி யாகவும், எக்காரியத்தையும் நிர்வகிக்கக் கூடிய யோக்யதை யுள்ளவனுகவு மிருப்பான்.

விரைய பாவ முதல் 7 ராசிகளிலும் 7 கிரகஹங்களும் இருக் கும்பொழுது பிறந்த மாலிகா யோகமுள்ள ஜாதகன் வெகு விரையங்கள் பண்ணுகின்றவனுகவும், எங்கும் பூஜிக்கப்படுகின் றவனுகவு மிருப்பான்.

வேறு ஒரு சாமர யோகம்

லக்னுதிபதி யானவன் தனக்குரிய உச்சராசியில் கேந்திர பாவத்தில் குருவினுல் பார்க்கப்பட்டிருந்தால் சாமர யோக மெனப் படும்.

லக்னத்திலோ, களத்திர பாவத்திலோ, பாக்ய பாவத் திலோ, மேஷாரணமென்ற பத்தாவது பாவத்திலோ இரண்டு சுபர்களிருந்தாலும் சாமர யோக மாகும்.

பல தீபிகையில் லக்னுதிபதி கேந்திர திரிகோண பாவங்களி லிருப்பதுடன் லக்னத்துக்கு சுபர் திருஷ்டியிருந்தால் சாமர யோகமென்று உபதேசிக்கப்பட் டிருக்கிறது.

முத லிரண்டுவித சாமர யோகங்களும் பராசர ஹோரையில் உபதேசிக்கப்பட் டிருக்கிறது.

சாமர யோகத்தில் ஜனித்த புருஷன் ராஜ பூஜ்யனுகவும், வாக்மியாகவும், வித்வானுகவும், பண்டிதனுகவும் இருப்பான். அல்லது சகல வேத சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி பண்ணியுள்ள அரசனுவன். இவன் 71 வருஷங்கள் வரை ஜீவித்திருப்பான். இவ்வாறு பராசர ஹோரையில் உபதேசிக்கப்பட் டிருக்கிறது.

சங்க யோகம்

சுக பாவத்தினதிபதியும், சத்துரு பாவத்தினதிபதியும், பரஸ்பரம் ஒருவர் கேந்திரத்தில் மற்றொருவராக இருப்பதுடன், லக்னுதிபதியும் பலத்திருந்தால் சங்க யோக மெனப்படும். லக்னுதி பதியும், பத்தாவது பாவாதிபதியும், சரராசியிலும், பாக்யாதி பதி பலத்துடனு மிருந்தாலும் சங்க யோகம்.

சங்க யோகத்தில் பிறந்தவன் சுகியாகவும், தயையுள்ளவ னுகவும், களத்திர, புத்திர, தன, க்ஷேத்ர (பூமி), சுகமுள்ளவ னுகவும், புண்ணிய கருமங்களையே செய்கின்றவனுகவும், சாஸ்த்ர ஞான முள்ளவனுகவும், ஆசாரவானுகவும், 81 வயதுள்ளவனுகவு மிருப்பான்.

கேந்திர திரிகோணுதிபதிகள் சேர்ந்து நல்ல பாவத்திலிருந் தால் சங்க யோக மெனப் பல தீபிகையில் உபதேசிக்கப்பட் டிருக்கிறது.

தன பாவம், விரைய பாவம், லக்னம், களத்திர பாவம் இந்த நான்கு பாவங்களிலும் கிரஹங்கள் இருக்க வேண்டும். கர்மாதிபதி பலவானுகை யிருக்க வேண்டும். இதற்குப் பேரி யோக மென்று பெயர்.

சுக்கிரனும், லக்னுதிபதியும் குருவிற்கு கேந்திரத்தில் இருப் பதுடன் பாக்யேஸ்வரனும் பலவானுக இருக்க வேண்டும். இப் படியிருந்தாலும் பேரி யோகம்.

பேரி யோகத்தில் ஜனித்தவன் நீண்ட ஆயுள் உள்ளவனுக வும், ரோகம், பயம் இல்லாதவனுகவும், நரேந்திரனுகவும், வெகு தனம், பூமிகள், புத்திரர், தாரம் இவையுள்ளவனுகவும், பிரசித்தி பெற்றவனுகவும், சுக சௌரிய மஹானுபாவனுகவும், உலகானு பவமுள்ள நிபுணனுகவும் இருப்பான்.

உச்ச ராசியிலிருக்கிற கிரஹமிருக்கிற நவாம்சாதிபதி கேந்திர திரிகோண பாவத்தில் ஸ்வக்ஷேத்ரகதனாகவோ உச்சனாகவோ பலத்துடன் இருந்து லக்னாதிபதியும் பலவானானால் மிருதங்க யோகமெனப்படும். மிருதங்க யோகத்தில் பிறந்தவன் கலியாணரூபவானாகவும், யஸஸ்வியாகவுய் ராஜ துல்லியவானாகவுமிருப்பான்.

		சந்தி குரு	ரவி செ-பு
ராசி	ராசி		சுக் ராகு
கேது			
			லக்

	சனி புதன்		
குஜன்	நவாம்சம்		கேது
லக்ன ராகு			
	சூரி		குரு சந் சுக்கி

இந்த ஜாதகத்தில் சந்திரன் உச்சம் பெற்றிருக்கிறான். சந்திரன் கன்னியா நவாம்சத்திலிருக்கிறான். கன்னியா நவாம்சாதிபதியான புதன் ராசியில் கேந்திரத்தில் ஸ்வக்ஷேத்ர கதனாக இருக்கிறது. லக்னாதிபதியும் புதனே தான். புதனுக்கு அசுபஸ்தானாதிபதிகளின் சம்பந்த மிருப்பினும் ஸ்வக்ஷேத்திர கதனாக இருப்பதனால் பலவானென்றே கூறலாம். இந்த ஜாதகனுக்கு மிருதங்க யோகமுண்டு என்று சொல்லலாம்.

காமாதிபதியானவன் (7-வது பாவாதிபதி) ராஜ்ய பாவத்திலும் ராஜ்யாதிபதியானவன் தனக்குரிய உச்சராசியில் பாக்யாதிபதியுடன் சேர்ந்திருந்தால் ஸ்ரீ நாதயோக மெனப்படும்; இந்த யோகத்தில் பிறக்கிறவன் தேவேந்திரன்போல் பிரகாசிப்பான்.

ராஜ்யாதிபதி 5வது பாவத்திலும், புத்திக்காரகனாகிய குரு கேந்திரத்திலும், ஆத்மகாரகனாகிய சூரியன் ஸ்வக்ஷேத்திரகதனாகவும், புத்திரக் காரகனாகிய குரு மனஸ்காரகனாகிய சந்திரனுக்கு திருகோணத்திலும், விக்கிரமக் காரகனாகிய குஜன் வித்யாகாரகனாகிய புதனுக்குத் திருகோணத்திலு மிருந்தால் சாரதா யோகமெனப்படும்.

வித்யா காரகனாகிய புதனுக்கு லாப பாவத்தில் புத்திரக் காரகனாகிய-குருவும் மற்ற கிரஹங்கள் மேல் காட்டியபடி யிருப்பினும் சாரதா யோக மெனப்படும்.

சாரதா யோகத்தில் பிறக்கிறவர்கள் களத்திரம், புத்திரன் பந்து இவர்களிடம் அதிக அபிமான முள்ளவர்களாகவும், தர்மப் பற்றுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அரசனுக்கு வேண்டியவர்களாகவு மிருப்பார்கள். குரு, பிராமண, தெய்வபக்தியுள்ளவர்களாகவு மிருப்பார்கள். வித்தியா பலமுள்ளவர்களாகவும், மதாபிமானிகளாகவும், வினயமுள்ளவர்களாகவும், ஸ்வதர்மத்துடன் கூடினவர்களாகவு மிருப்பார்கள்.

லக்னாது பாக்ய பாவத்தில் அசுபனும், புத்திர பாவத்தில் சுபன் அசுபன் இருவரும், சுகபாவத்திலோ, அஷ்டம பாவத்திலோ, ஒரு அசுபனு மிருந்தால் மத்சிய யோக மெனப்படும். மத்சிய யோகத்தில் பிறந்தவன் காலக்ஞனாகவும் (ஜோதிர்க்ஞான முள்ளனாகவும்) கருணை உள்ளவனாகவும், நற்குணங்களுள்ளவனாகவும், தீக்ஷண புத்தி யுள்ளவனாகவும், அழகுள்ளவனாகவும், கீர்த்தியுள்ளவனாகவும், விரத சீலனாகவு மிருப்பான்.

சுபர்கள் களத்திர, புத்திர, சத்துரு பாவங்களிலும், அசுபர்கள் சகோதர லாபலக்ன பாவங்களிலும் தங்களுக்குரிய சுப ராசிகளிலோ, சுப நவாம்சங்களிலோ யிருந்தால் கூர்ம யோக மெனப்படும். கூர்ம யோகத்தில் பிறக்கிறவன் பரந்த கீர்த்தியுள்ளவனாகவும், ராஜபோகியாகவும், சத்வகுண பிரதானனாகவும், தீரனாகவும், சுகியாகவும், வாக்கினால் சகாயம் செய்கின்றவனாகவும் இருப்பான். ஒரு சமயம் அரசனாகவும் ஆகக்கூடும்.

பாக்யாதிபதியும், தனபாவாதிபதியும், பரிவர்த்தன யோகம் பெற்றும், லக்னாதிபதி கேந்திர பாவத்திலோ, திருகோண பாவத்திலோ யிருந்தால் கட்க யோக மெனப்படும். கட்க யோக முள்ளவர் வேதங்கள், பலவித சாஸ்திரங்கள் இவைகளில் பூர்ண ஞான முள்ளவர்களாகவும், மத மாச்சர்யமற்றவர்களாகவும், புகழத்தக்க குணமுள்ளவர்களாகவும், நன்றி மறவாதவர்களாகவு மிருப்பார்கள்.

பாக்யாதி பதியானவன் கேந்திரத்தில் மூல திருகோண ராசியிலும், லக்னாதிபதி பூர்ண பலத்துடன் தனக்குரிய உச்ச ராசியிலு மிருந்தால் லக்ஷ்மி யோக மெனப்படும். லக்ஷ்மியோக முள்ளவன் ராஜாதி ராஜனாகவும், சிறந்த குணங்களுள்ளவனாகவும், வெகு தேச நாதனாகவும், வித்தையினால் பிரகாசிக்கின்றவனாகவும், வெகுதாரப் புத்திராதிகளுள்ளவனாகவு மிருப்பான்.

ஸ்திர ராசியில் கேந்திர பாவத்தில் களத்திரக் காரனுகிய சுக்கிரனும், மனஸ்காரனுகிய சந்திரன் திருகோணத்திலும், சனியானவன் தசம கேந்திரத்திலும் இருந்தால் குசும யோக மெனப் படும். குசும யோகத்தில் பிறந்தவன். புகழ்பெற்ற அரசனுக வும், அரசர்களால் வணங்கப்பட்டவனுகவும் இருப்பான்.

லக்னதிபதி எந்த ராசியிலிருக்கிருனே அந்த ராசி அதிபதி யிருக்கும் நவாம்சராசி யதிபதி கேந்திர, திருகோண உச்ச ராசியி லிருந்தால் பாரிஜாத யோக மெனப்படும். பாரிஜாத யோக முள்ளவன், தனது ஆயுள் பாகத்தில் மத்தியிலும் முடிவிலும் சுக முள்ள அரசனுகவும், பல அரசர்களால் வணங்கப்பட்டவனுக வும், யுத்தப் பிரியனுகவும், கஜங்கள், அசுவங்களுள்ளவனுகவும், ஸ்வகர்ம தர்மப் பற்றுள்ளவனுகவும், தயாளுவாகவு மிருப்பான்.

தனபாவத்திலோ (2) பூர்வ புண்ணிய பாவத்திலோ (5) இருக்கிற குரு, புத-சுக்கிரர்களால் பார்க்கப்பட்டாலும், அவர்க ளுடன் சேர்ந்திருந்தாலும், அல்லது அவர்களுடைய ராசியி லிருந்தாலும் கலாநிதி யோக மெனப்படும். கலாநிதி யோகத்தில் பிறந்தவன் பல அரசர்களால் சேவிக்கத் தகுந்த பதவியில் இருப்பவனுகவும், யாதொரு ரோகமும் சத்துருவு மற்றவனுகவும் யானே, குதிரை படைகளுள்ளவனுகவும், இருப்பான்.

குரு 2 வது பாவத்திலோ, 5-வது பாவத்திலோ புத சுக் கிரர்களுடைய வீட்டில் இருந்தால் கலாநிதி யோகமென்று சொல்லி யிருப்பினும் குருவும், குரு இருக்கும் ராசிக்கு அதிபதி யும், ராசி அம்சங்களில் வேறு விதத்திலும் பலம் பெற்றிருந்தால் தான் இந்த யோகத்திற்குரிய பலன்கள் நடைபெறும். இப் படியே மற்ற யோகங்களுக்குரிய பலன்களேயும் அறிந்துகொள்ள

		லக் சுக்	சூரிய சந்தி செ-பு
சனி	ராசி		கேது
ரா			
			குரு

		சூரி புதன்	கேது.
சந்	அம்சம்		சுக்கி குரு
லக்ன			
ரா	செவ்	சனி	

வேண்டும். இந்த ஜாதகத்தில் குரு 5 வது ராசியில் புதனுடைய

வீட்டில் இருப்பதுடன் புதன் ஸ்வக்ஷேத்திர கதனுக சுபபாவத்தி லும், குரு உச்ச நவாம்சத்திலும் இருக்கிறதால் இந்த ஜாதக னுக்கு கலாநிதி யோகமென்று கூறலாம். ஆயினும் குரு அஷ்ட மாதிபதி யாவதால் கலாநிதிக்குரிய பலன்கள் அப்படியே பூர்ண மாக நடைபெறு மென்று சொல்லுவதற்கில்லே. முக்கியமாய் குரு சுபபாவாதிபதியாய் தனக்குரிய ஆட்சி உச்ச நவாம்சத்தி லிருந்து குரு இருக்கும் ராசியதிபதி புதன், சுக்கிரன் இவ்விரண் டில் எதுவாக வருகிறதோ அது ராசியிலாவது நவாம்சத்திலா வது ஆட்சி உச்சமாக இருப்பின் கலாநிதி யோகத்திற் குரிய பலன்களெல்லாம் பூர்ணமாய் நடைபெறும்.

குருவும் சுக்கிரனும் கேந்திர பாவங்களிலும் சனி கேந்திர பாவத்தில் உச்சம் பெற்றும் ஜன்மலக்னம் சரராசியாகவு மிருந் தால் அம்சாவதார யோக மெனப்படும். இந்த யோகத்தில் பிறந்த வன் நற்கீர்த்தி யுள்ளவனுகவும், யாத்திரைகள் பண்ணுகின்றவ னுகவும், வேத சாஸ்திராதி காரியாகவும், ஜிதேந்திரியனுகவும், அரசனுக்கு ஒப்பானவனுகவு மிருப்பான்.

சுபர்கள் தனதிபதிக்கு 2, 12, 8, இந்த ராசிகளிலிருந்தால் ஹரிஹரப்ரம்ம யோக மெனப்படும்.

களத்திராதி பதிக்கு 4 வது, 9 வது, 8 வது பாவங்களில் குருவும் சந்திரனும் புதனும் இருந்தாலும் ஹரிஹரப்ரம்ம யோக மெனப்படும்.

லக்னதி பதிக்கு 4 வது, 10 வது, 11 வது பாவங்களில் சூரிய னும், சுக்கிரனும், செவ்வாயும் இருந்தாலும் ஹரிஹரப்ரம்ம யோக மெனப்படும்.

ஹரிஹரப்ரம்ம யோகத்தில் பிறந்தவன் எல்லா சாஸ்திரங் களேயும் அறிந்தவனுகவும், சத்தியவாதியாகவும், மிருதுவாகப் பேசுகின்றவனுகவும், சத்துருக்களே நாசம் செய்கின்றவனுகவும், சர்வ ஜீவோபகாரியாகவும், புண்ணிய கர்மியாகவு மிருப்பான்.

ஆதித்யாதி சப்த கிரஹங்களும் சரராசிகளிலேயே இருந் தால் ரஜ்ஜு யோக மெனப்படும்.

மேஷம், கடகம், துலாம் மகரம் இவை சர ராசிகள்.

ரஜ்ஜு யோகத்தில் பிறந்தவன் ஈர்ஷையுள்ளவனுகவும், வேறு தேசங்களுக்குப் போவதற்குப் பற்றுதல் உள்ளவனுகவு மிருப்பான். ஈர்ஷை என்ருல் பொருமை என்று பொருள்.

ஆதித்யாதி ஏழு கிரஹங்களும், ஸ்திர ராசிகளான ரிஷபம், சிம்ஹம், விருச்சிகம், கும்பம் இவைகளிலேயே இருந்தால் முசல யோக மெனப்படும். முசல யோகத்தில் பிறந்தவன் மமதை உள்ளவனாகவும், தனிகனாகவும், பல காரியங்கள் உள்ளவனாகவு மிருப்பான்.

ஆதித்யாதி சப்த கிரஹங்களும் உபய ராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இவைகளிலேயே இருந்தால் நள யோக மெனப்படும். நள யோகத்தில் பிறந்தவன், ஏதோ ஒரு வழியில் அங்கக்குறை யுள்ளவனாக இருப்பினும், நுட்பமான புத்தி யுள்ளவனாக இருப்பான்.

எல்லா சுபர்களும் கேந்திரத்திலிருந்தால் மாலா யோக மெனப்படும். குரு, சுக்கிரன், பாபியுடன் சேராத புதன், சுக்கில பக்ஷ சந்திரன் இவர்கள் சுபர் எனப்படுவார். மாலா யோகத்தில் பிறந்தவன் சுகியாக இருப்பான்.

பாபக் கிரஹங்களெல்லாம் கேந்திர பாவங்களிலிருந்தால் சர்ப்ப யோக மெனப்படும். சூரியன், அங்காரகன், சனி, பாபியுடன் சேர்ந்த புதன், கிருஷ்ண பக்ஷ சந்திரன் இவர்கள் அசுபர்கள். சர்ப்ப யோகத்தில் பிறந்தவன் பல வழிகளிலும் கஷ்டப்படுவான்.

ஏழு கிரஹங்களும் அடுத்தடுத்து இரண்டு கேந்திரங்களிலிருந்தால் கதா யோக மெனப்படும். அதாவது எல்லா கிரஹங்களும் ஒன்றாவது பாவத்திலும் நான்காவது பாவத்திலுமோ அல்லது நான்கிலும் ஏழிலுமோ, அல்லது ஏழிலும் பத்திலுமோ அல்லது பத்திலும் ஒன்றிலுமோ இருக்கவேண்டும். கதா யோகத்தில் பிறந்தவன் யாக யக்ஞங்கள் பண்ணுகின்றவனாகவும், தனவரவு உள்ளவனாகவும், பணம் தேடுவதில் பற்றுள்ளவனாக இருப்பான்.

லக்னத்திலும் ஏழாவது பாவத்திலும் கிரஹங்களெல்லா மிருந்தால் சகட யோக மெனப்படும். சகட யோகத்தில் பிறந்தவன் வண்டியைக்கொண்டு ஜீவனம் பண்ணுகிறவனாகவும், வியாதியினால் பீடிக்கப்பட்டவனாகவும், நற்குணமில்லாத மனைவி யுள்ளவனாகவு மிருப்பான்.

நான்காவது பாவத்திலும் பத்தாவது பாவத்திலும் கிரஹங்களெல்லாம் இருப்பின் விஹக(பட்சி)யோக மெனப்படும். விஹக யோகத்தில் பிறந்தவன் தூதனாகவும், அலைகின்றவனாகவும், கலகம் பண்ணுகிறவனாகவும் மிருப்பான். லக்னபாவம், புத்திர

பாவம், பாக்கியபாவம் இம்மூன்று சுப பாவங்களிலும் கிரஹங்களெல்லாமிருந்தால் சிருங்காடக யோக மெனப்படும். சிருங்காடக யோகத்தில் பிறந்தவன் கடைவயதில் சுகியாக இருப்பான். அதுவரையில் கஷ்டப்படுவானென்று பொருள்படுகிறது.

தனபாவத்திலும், சத்துருபாவத்திலும், ஜீவனபாவத்திலும், கிரஹங்களெல்லா மிருப்பின் ஹல யோக மெனப்படும். சகோதர பாவத்திலும், அதற்குத் திருகோண பாவங்களான லக்னாத் ஏழாவது பதினொன்றாவது பாவங்களிலும் கிரஹங்களெல்லா மிருப்பினும், மாதுர் பாவத்திலும் அதற்குத் திருகோணங்களான லக்னாது எட்டாவது, பன்னிரெண்டாவது பாவங்களிலும் கிரஹங்களெல்லா மிருப்பினும் ஹல யோக மெனப்படும். ஹல யோகத்தில் பிறந்தவன் கிருஷி (பயிர்)த் தொழில் செய்கின்றவனாக இருப்பான்.

சுப கிரஹங்களெல்லாம் லக்ன பாவத்திலும், களத்திர பாவத்திலும், அசுபர்களெல்லாம் மாதுர்பாவத்திலும், ஜீவன பாவத்திலு மிருந்தால் வஜ்ர யோக மெனப்படும். வஜ்ர யோகத்தில் பிறந்தவன் முதல் வயதிலும் கடைவயதிலும் சுகியாக இருப்பான் அதாவது நடுவில் கஷ்டப்படுவான் என்பது. முதலில் ஆயுளை நிர்ணயிக்கவேண்டும். பிறகு அதை மூன்று பாகமாகப் பிரிக்க வேண்டும். ஜாதகரீதியாக அறுபது வயதென்று ஆயுள் நிர்ணயம் செய்யப்பட்டவனுக்குப் பிறந்தது முதல் இருபது வயது வரையிலும் சுகியாக இருப்பான் என்றும், இருபது முதல் நாற்பது வயதுவரை கஷ்டப்படுவானென்றும், நாற்பது முதல் அறுபது வரை திரும்பவும் சுகியாக இருப்பானென்றும் வஜ்ரயோகத்தில் பிறந்தவனுக்கு உபதேசிக்கவேண்டும். இப் பலன்களெல்லாம் தசைகளைக் குறிப்பிடாமல் மொத்த பலன்களாகச் சொல்லப்பட்டன.

அசுபர்களெல்லாம் லக்னபாவத்திலும், களத்திர பாவத்திலும், சுபர்களெல்லாம் மாதுர் பாவத்திலும், ஜீவன பாவத்திலும் ருந்தால் யவ யோக மெனப்படும். யவ யோகத்தில் பிறந்தவன் க்கிரமியாகவும் நடுவயதில் சுகியாகவு மிருப்பான்.

கிரஹங்களெல்லாம் நான்கு கேந்திர பாவங்களிலும் பரவியிருந்தால் கமல யோக மெனப்படும். இதுவே பத்ம யோக மென்றும் சொல்லப்படும். இந்த யோகத்தில் பிறந்தவன் எங்கும் கீர்த்தியுள்ளவனாகவும், அதி சுகியாகவும், அதி விநய முள்ளவனாகவு மிருப்பான்.

கிரஹங்களெல்லாம் தன, பஞ்ச, அஷ்டம, லாப பாவங்களிலோ, அல்லது சகோதர, சத்துரு, பாக்ய, விரைய பாவங்களிலோ இருந்தால் வாபி யோக மெனப்படும். வாபி யோகத்தில் பிறந்தவன் அனுபவிக்கின்ற சுகம் கொஞ்சமாயினும் அதை நீண்டகாலம் அனுபவிக்கின்றவனுகவும், பிறருக்கு கொடுப்பதற்கு மனமில்லாதவனய் பூமிக்குள் பணத்தைப் புதைத்து வைப்பான்.

லக்னபாவத்திலும், தனபாவத்திலும், சகோதர பாவத்திலும், மாதுர் பாவத்திலுமாக கிரஹங்களெல்லாம் இருந்தால் யூப யோக மெனப்படும். யூப யோகத்தில் பிறந்தவன் வாபி யோகத்தில் பிறந்தவனைப் போல் இராமல் தானம் செய்பவனுகவும், யாகங்களைப் பண்ணுகின்றவனுகவு மிருப்பான்.

கிரஹங்களெல்லாம் மாதுர் பாவம் முதல் களத்திரபாவம் வரையிலும் தொடர்ந்து இருந்தால் இஷு அல்லது ஸர யோக மெனப்படும். ஸர யோகத்தில் பிறந்தவன் ஹிம்ஸிக்கும் ஸ்வபாவமுள்ளவனுகவும்,ஜெயில் முதலிய ஸ்தலங்களில் உத்தியோகம் பண்ணுகின்றவனுகவும், அம்பு முதலிய கருவிகளைச் செய்கின்றவனுகவு மிருப்பான். கிரஹங்களுடைய பலத்திற்குத் தகுந்தாற்போல அவனுடைய உத்தியோகம் உயர்ந்ததாகவோ, தாழ்ந்ததாகவோ இருக்கும்.

களத்திரபாவ முதல் ஜீவனபாவம் வரையில் கிரஹங்களெல்லாம் தொடர்ந்து இருப்பின் சக்தி யோக மெனப்படும். சக்தி யோகத்தில் பிறந்தவன் குலாசாரத்திற்கு விருத்தமான காரியாதிகளில் பிரவர்த்திக்கின்றவனுகவும், சுருசுருப்பு இல்லாதவனுகவும், யாதொரு சுகமில்லாதவனுகவு மிருப்பான்.

கிரஹங்களெல்லாம் ஜீவனபாவமுதல் லக்னபாவம் வரையில் தொடர்ச்சியாக இருந்தால் தண்ட யோக மெனப்படும். தண்ட யோகத்தில் பிறந்தவன் களத்திரம், புத்திரன், மித்திரன் இவ்வகை சுகமில்லாதவனய் தாழ்ந்த ஜாதியர்க்கு உசிதமான விருத்தியை கைக்கொள்ளுவான். அதாவது தாழ்ந்த நிலமையில் இருப்பான்.

லக்ன முதல் வரிசையாக 7 ராசிகளிலும் சூரியன் முதல் சனி வரையில் உள்ள கிரஹங்கள் இருந்தால் நௌ யோக மெனப்படும். நௌ யோகத்தில் பிறந்தவன் நல்ல கீர்த்தியுள்ளவனுகவும், சுகமேற்படினும் அதை நீண்டகாலம் அனுபவிப்பதற்கு இல்லாதவனுகவும், கிருபணனுகவும் இருப்பான். நௌ யோகத்தில்

பிறந்தவன் ஜலத்தின்மேல் வசிக்கின்றவனுகவும், அங்கேயே ஜீவனம் பண்ணுகின்றவனுகவும் இருப்பான் என ஜாதக பாரிஜாத மென்ற நூலில் உபதேசிக்கப் பட்டிருக்கின்றது.

சுகஸ்தானமாகிய நான்காவது பாவ முதல் கர்மஸ்தானமாகிய பத்தாவது பாவம் வரையில் ஏழு பாவங்களிலும் தொடர்ச்சியாக ஆதித்யாதி சப்தகிரஹங்களு மிருந்தால் கூட யோக மெனப்படும். கூடயோகத்தில் பிறந்தவன் பொய் சொல்லுகின்றவனுகவும், காராகிருஹத்தை ரக்ஷிக்கின்றவனுகவு மிருப்பான். பாவரீதியாக வாக்கு பாவாதிபதி பலத்திருந்தாலும்கூட இவ்வித கிரக ஸ்திதி யுள்ளவன் பொய்தான் சொல்லக்கூடியவன் என்பது பொருள். காராகிருஹத்தை ரக்ஷிக்கின்றவன் என்பதால் ஜெயில் சூப்பரின்டென்டெண்ட் முதலான உத்தியோகம் வகிப்பானென்றும் கூறலாம். இப்படி வராஹமிகிராசாரியர் பிரஹத் ஜாதகத்தில் உபதேசிக்கிருர். கூடயோகத்தில் பிறந்தவன் மலைவனந்திரங்களை நாடுகின்றவனென்றும், குரூரமான காரியங்களைச் செய்கிறவனுக யிருப்பானென்றும் ஜாதக பாரி ஜாதத்தில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது.

களத்திர பாவமாகிய 7 வது பாவமுதல் லக்னபாவம் வரையில் ஏழு பாவங்களிலும் தொடர்ச்சியாக ஏழு கிரஹங்களுமிருந்தால் சத்ர யோகமெனப்படும். சத்ர யோகத்தில் பிறந்தவன் தனது பந்துக்களுக்கு உபகாரம் பண்ணுகின்றவனுகவும், ஆயுளின் முற்பகுதியில் கஷ்டங்களிருப்பினும் முடிவில் சுகத்தை அடைவான்.

கர்மஸ்தானமாகிய 10வது பாவமுதல், சுகஸ்தானமாகிய நான்காவது பாவம்வரையில், ஏழு ராசிகளிலும் ஏழு கிரஹங்களு மிருந்தால் இவ்வித கிரஹஸ்திதிக்கு சாப யோக மெனப்படும். இதை தனுர் யோக மென்றும் சொல்லுவதுண்டு. சாப யோகத்தில் பிறந்தவன் திருடர்களாகவும், ஜன சமூகத்தினல் வெறுக்கப் பட்டவர்களாகவு மிருப்பார்கள்.

இதுவரையில் லக்னகேந்திரம், சதுர்த்த கேந்திரம், சப்தம கேந்திரம், தசம கேந்திரம் இந்த நான்கு கேந்திரங்களையும் கொண்டு அந்தந்த கேந்திர பாவத்திலிருந்து, ஏழு கிரஹங்களும் ஏழு ராசிகளிலும் இருப்பதற்குண்டான பலன்கள் உபதேசிக்கப்பட்டன. இனி கேந்திரத்திற்கு அடுத்த ஸ்தானங்களான 2வது, 5வது, 8வது, 11வது, பாவங்களான ஒவ்வொரு பணபரபாவ முதல் 7 ராசிகளிலும் ஏழு கிரஹங்களும் இருந்தாலும், பணபரத்திற்கு அடுத்த ஸ்தானங்களான 3வது, 6வது, 9வது, 12வது

பாவங்களான ஒவ்வொரு ஆபோக்கிலிம பாவ முதல் 7 ராசிகளி லும் ஏழு கிரஹங்களுமிருந்தால் அர்த்த சந்திரயோக மெனப் படும். இங்கு கூறிய முறைப்படி அர்த்த சந்திர யோகம் 7 வித மாகப் பிரியும். அர்த்த சந்திரயோகத்தில் பிறந்தவன் யாவ ருக்கும் பிரியனுகவும், நல்ல சரீர முள்ளவனுகவும், பிரதானனுகவு மிருப்பான். சுகியாக இருப்பானென்று ஜாதக பாரிஜாதத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, நான்காவது, ஆருவது, எட்டாவது, பத்தா வது, பனிரெண்டாவது ஆகிய இந்த ஆறு பாவங்களிலும் சப்த கிரஹங்களு மிருந்தால் சமுத்திர யோக மெனப்படும். சமுத்திர யோகத்தில் பிறந்தவன் அரசனுக்கு ஒப்பாகவும், சுகியாகவுமிருப் பான்.

லக்னம், விக்ரமஸ்தானமாகிய மூன்ருவது பாவம், புத்திர ஸ்தானமான 5வது பாவம், களத்திர பாவமான 7வது பாவம், பாக்ய பாவமான 9வது பாவம், ஆயபாவமாகிய 11வது பாவம் ஆக இந்த ஆறு ராசிகளிலேயும் சப்த கிரஹங்களிருந்தால் சக்ர யோக மெனப்படும். சக்ர யோகத்தில் பிறந்தவன் அரசர்களால் கௌரவிக்கத் தகுந்தவனுக இருப்பான். கீர்த்தி வாய்ந்த அரச னுக இருப்பானென்று ஜாதக பாரிஜாதத்தில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தில் பெரிய அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களேயும் அரசர்களென்றே தற்கால நிலமையை ஒட்டிச் சொல்லலாம்.

சப்த கிரஹங்களும் ஏதாவது 7 ராசிகளில் இருந்தால் வல்லகி யோக மெனப்படும். இதையே வீணு யோக மென்றும் சொல்லுவ துண்டு. இந்த யோகத்தில் பிறந்தவன் நிபுணனுகவும், சங்கீதம், நர்த்தனம் இவற்றில் பற்றுதல் உள்ளவனுகவும் இருப்பான்.

சப்த கிரஹங்களும் ஏதாவது 6 ராசிகளில் இருந்தால் தாம என்ற யோகமாகும். தாம யோகத்தில் பிறந்தவன் தருமம் செய் பவனுகவும், பிறருக்கு உபகரிக்கும் தன்மையுள்ளவனுகவும், பசுக் களே சம்ரக்ஷிக்கின்றவனுகவு மிருப்பான். மகா புத்திமானுகவும், தனிகனுகவு மிருப்பானென்று ஜாதக பாரிஜாதத்தில் உபதேசிக் கப்பட்டிருக்கிறது.

சப்தகிரஹங்களும் ஏதாவது 5 ராசிகளிலிருந்தால் பாசம் என்ற யோகமாகும். பாச யோகத்தில் பிறந்தவன் நியாயமானவழி யில் கிடைத்த தனமுள்ளவனுகவும், வேலேயாட்கள், பந்துக்கள்

இவர்களுக்கு பிரியனுகவும் இருப்பான். நல்லொழுக்க முள்ள வனுகவும், தனம் சேர்ப்பதில் சதுரனுகவும் அதாவது சாமர்த்தி யம் வாய்ந்தவனுகவும், வாக் சாலகனுகவும், புத்திரவானுகவும் இருப்பானென்று ஜாதக பாரிஜாதத்தில் உபதேசிக்கப்பட்டிருக் கிறது.

ஆதித்யாதி சப்தகிரஹங்களும் ஏதாவது நான்கு ராசிகளி லிருந்தால் கேதாரம் என்ற யோகமாகும். கேதார யோகத்தில் பிறந்தவன் கிருஷிகரனுகவும், அதாவது பயிர்த்தொழில் செய் கின்றவனுகவும், அநேகம் பெயர்களுக்கு நல்ல காரியங்கள் மூலம் உபகாரம் பண்ணுகின்றவனுகவு மிருப்பான். தன மிச்சத்தை அடைகின்றவனுகவும், விஷயங்களேத் தாமதித்து அறியக்கூடிய வனுகவும், பந்துபிரியனுக இருப்பானென்று ஜாதக பாரிஜாதத் தில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது.

ஆதித்யாதி சப்த கிரஹங்களும் ஏதாவது மூன்று ராசி களிலிருந்தால் சூல யோக மெனப்படும். சூல யோகத்தில் பிறந் தவன் சூரனுகவும், சரீரத்தில் காயமுள்ளவனுகவும், பணத்தில் அதிகமான பற்றுள்ளவனுகவும், தரித்திரனுகவு மிருப்பான்.

ஆதித்யாதி சப்தகிரஹங்களும் ஏதாவது இரண்டு ராசிகளி லிருந்தால் யுகம் என்ற யோகமாகும். இந்த யோகத்தில் பிறந்தவன் தனமில்லாதவனுக இருப்பதுடன், வேத மார்க்கத்தினின்றும் விலகினவனுக இருப்பான். பிச்சை எடுத்துச் சாப்பிடுகின்றவ னுகவும், சபல சித்தமுள்ளவனுகவும், பாஷாண்டியாகவும், மது பானம் பண்ணுகின்றவனுகவும் இருப்பான் என்று ஜாதக பாரி ஜாதத்தில் சொல்லியிருக்கிறது.

சப்த கிரஹங்களும் ஒரே ராசியிலிருந்து விட்டால் கோளகம் என்ற யோகமாகும். இந்த யோகத்தில் பிறந்தவன் தனமில்லா தவனுகவும், அசுத்த சரீரமுள்ளவனுகவும், மௌட்டியனுகவும், யாவராலும் நிந்திக்கப்பட்ட காரியத்தை செய்கின்றவனுகவும், சோம்பேரியாய் உணவுக்காக அலேகின்றவனுகவு மிருப்பான். அற்ப ஆயுசுள்ளவனுக இருப்பானென்று அதிகப்படியாக ஒரு பலன் ஜாதக பாரிஜாதத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் சொல்லிவந்ததில் ரஜ்ஜு, முசல, நள இம் மூன்றும் ஆச்ரய யோகங்களென்றும்; மாலம், சர்ப்பம் இவ் விரண்டும் தள யோகமென்றும்; கதா, சகட், விஹக, சிருங் காடக, ஹல, வஜ்ர, யவ, கமலா, வாபி, யுப, இஷு, சக்தி

தண்டம், நௌ, கூட, சத்ர, சாப, அர்த்த, சந்திர, சமுத்ர, சக்ர ஆகிய இவ்விருபது யோகங்களும், அக்ருதி யோகமென்றும், வல்லகி, தாமினி, பாச, கேதார, சூல, யுக, கோள இவ்வேழு யோகங்களும் சாங்கிய யோகமென்றும், இம் முப்பத்திரண்டு யோகங்களும் சேர்த்து நாபச யோகமென்றும் சொல்லப்படுகின்றன. ஜாதக பலன்களை நிர்ணயிக்கும் விஷயத்தில் இம் முப்பத்திரண்டு நாபச யோகங்களையும் நன்கு கவனித்தல் அவசியம்.

பாக்யாதிபதியான ஒன்பதாவது பாவாதிபதியும், கர்மாதிபதியான பத்தாவது பாவாதிபதியும் சேர்ந்து சுபபாவத்தில் இருந்தால் ராஜ யோக மேற்படும். இவ்விதம் சொல்லியிருப்பினும் இவ்விரு பாவாதிபதிகளுக்கும் அசுப சம்பந்தம் திருஷ்டி இவையில்லாமலும் தமக்குரிய சுபராசிகளிலு மிருக்கவேண்டும். நவாம்சத்திலும் பலத்துடனிருக்க வேண்டும். ஜாதகன் அரசத்துவமுள்ளவனாக இருப்பானென்பது இதற்கு முக்ய பலன்; உயர்ந்த பதவிக்கு வரக்கூடும்.

ஒன்பது, பத்து இவ்விரு பாவங்கள் தவிர வேறு ஒரு கேந்திராதிபதியும் திருகோணாதிபதியும் சேர்ந்து சுப பாவத்தில் சுப ராசியிலிருந்தால் சங்க யோக மெனப்படும். சங்க யோகத்தில் பிறந்தவன் சிறப்புள்ள ஸ்திரிகளுடன் கூடினவனென்று பல தீபிகையில் உபதேசிக்கப்பட் டிருக்கிறது.

இவ்வித பலவித க்ரஹஸ்திதிகள், அவைகளின் பெயர் அவ்வவற்றிற்குரிய பலன்கள் இவைகளெல்லாம் பராசர ஹோரை, பலதீபிகை, பாரிஜாதம், பிரஹத் ஜாதகம், ஜாதகாதேசம், சாராவளி இந்த ஆறு நூல்களிலும் சிதரிக்கிடக்கின்றதைக் கோவையாக எழுதப்பட் டிருக்கிறது.

முடிவுரை

இந்த யோக மஞ்சரி என்ற நூலில் கூறியுள்ள யோகங்களாவன:—(1) சுனபா யோகம், (2) அனபா யோகம், (3) துருதுரா யோகம், (4) கேமதுரும யோகம், (5) கேமத்ரும பங்க யோகம், (6) தரித்திர யோகம். (7) சகட யோகம், (8) கஜகேசரி யோகம், (9) அதம-சம-வரிஷ்ட யோகங்கள், (10) சந்திராதி யோகம், (11) வேசி யோகம், (12) வாசி யோகம், (13) உபயசரி யோகம், (14) சுப யோகம், (15) அசுப யோகம், (16) சுபகர்த்தரி யோகம், (17) அசுபகர்த்தரி யோகம், (18) ஸுசுப யோகம், (19) லக்னாதி யோகம், (20) அமலா யோகம், (21) பஞ்சமஹா புருஷ யோகங்

கள், (22) வசுவான் என்ற யோகம், (23) புஷ்கல யோகம், (24) சுபமாலா - அசுபமாலா யோகங்கள், (25) லக்ஷ்மி யோகம், (26) கௌரி யோகம், (27) சரஸ்வதி யோகம், (28) ஸ்ரீகண்ட யோகம், (29) ஸ்ரீநாத யோகம், (30) வைரிஞ்சி யோகம், (31) பர்வத யோகம், (32) மஹாபாப யோகம், (33) பாஸ்கர யோகம், (34) இந்திர யோகம், (35) மருத் யோகம், (36) புத யோகம், (37) தைந்நிய யோகங்கள், (38) கல யோகங்கள், (39) மகா யோகங்கள், (40) சாமர யோகம், (41) தேனு யோகம், (42) சௌரிய யோகம், (43) அம்புதி யோகம், (44) சத்திர யோகம், (45) அஸ்திர யோகம், (46) காம யோகம், (47) அசுர யோகம், (48) பாக்ய யோகம், (49) கியாதி யோகம், (50) பாரிஜாத யோகம், (51) முசல யோகம், (52) அவ யோகம், (53) நிஸ்வ யோகம், (54) மிருதி யோகம், (55) குஹூ யோகம், (56) பாமர் யோகம், (57) ஹர்ஷ யோகம், (58) துஷ்கிருதி யோகம், (59) சரள யோகம், (60) நிர்பாக்ய யோகம், (61) துர் யோகம், (62) தரித்திர யோகம், (63) விமல யோகம், (64) மாலிகா யோகம், (65) சாமர யோகம், (66) பேரி யோகம், (67) மிருதங்க யோகம், (68) ஸ்ரீநாத யோகம், (69) சாரதா யோகம், (70) மத்சிய யோகம், (71) பாரிஜாத யோகம், (72) கலாநிதி யோகம், (73) அம்சாவதார யோகம், (74) ஹரிஹரப்ரம்ம யோகம், (75) 32-வித நாபச யோகங்கள், (76) ராஜ யோகம், (77) சங்க யோகம்.—ஆக இந்த 77 வித யோகங்களையும், அவற்றுளடங்கிய பல உட்பிரிவுகளுடன் நன்கு கவனித்து ஜாதக பலன்களை ஊகிப்பது சாஸ்திரீயமான முறையாகும்.

இத்துடன் யோக மஞ்சரி என்ற நூல் முடிவு பெறுகிறது.

சுப மஸ்து.